விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 07 திங்கட்கிழமை (20.04.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 123

ஜோதிடக் கலைமாமணி
**சிவல்புரி சிங்காரம்**
எழுதும்
புத்தாண்டு ராசி பலன்கள்

## பொதுத் தேர்தலுக்கான முடிவு இன்று

### சுகாதார அதிகாரிகளை சந்தித்த பின் மகிந்த தேசப்பிரிய இறுதி முடிவை அறிவிப்பார்



(கொழும்பு)
எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான திகதி இப்போது திட்டமிடப்பட வேண்டுமா அல்லது தேர்தலை ஒத்திவைக்க வேண்டுமா என்ற கடுமையான விவாதத்திற்கு மத்தியில், தேர்தல்கள் ஆணைக்குழு தனது இறுதி முடிவை எடுப்பதற்கு முன்னர் சுகாதார அதிகாரிகளின் கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானித்துள்ளது.

தேர்தலை நடத்துவதற்கான 16

## கொரோனா இன்னும் முடிவடையவில்லை

# உங்கள் பாதுகாப்பை நீங்களே உறுதிப்படுத்துங்கள்

### பொதுமக்களிடம் தொற்று நோய் தடுப்புப் பிரிவு வேண்டுகோள்

***(கொழும்பு) கொரோனா வைரஸ் தொற்று இன்னும் நாட்டில் முடியவில்லை. உங்களுடைய பாதுகாப்பை நீங்களே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் என தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.***

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுகின்ற நிலையில் நாட்டின் பாதுகாப்பு குறித்து தொற்றுநோய் தடுப்பு பிரிவின் விசேட வைத்தியர் சுதத் சமரவீர இது குறித்து தெளிவு படுத்துகையில்,

கடந்த காலங்களில் "கோவிட் - 19" கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டவுடன் அவர்களுடன் தொடர்பு பட்ட நபர்கள் "கோவிட்-19" வைரஸ தொற்றுநோய் மூலமாக தாக்கப்பட்டுள்ளனர் என்ற அறிகுறிகள் வெளிக்காட்ட முன்னரே நாம் அவர்களை இனங்கண்டு அவர்களை தனிமைப்படுத்தி நோய் பரவலை கட்டுப்படுத்திவிட்டோம்.

எனினும் இதில் பாரதூரமான விடயம் என்னவெனில் கொழும்புப் பகுதியில் 15

ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள நிலையில்

## பொதுமக்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

(யாழ்ப்பாணம்)
வடமாகாணம் முழுவதும் ஊரடங்குச் சட்டம் இன்று தளர்த்தப்பட்டுள்ளது.

இந்நிலையில்நாட்டில்கொரோனா தொற்றும் வாய்ப்புள்ள அசாதாரண நிலை நிலவுவதன் காரணமாக பொதுமக்கள் பின்வரும் விடயங்களை கடைப் 16

- ஊரடங்கு இன்று தளர்கிறது -

## நேற்று மட்டும் 17 பேர் கொரோனாவால் பாதிப்பு

(கொழும்பு)
யாழ்ப்பாணம் உள்ளிட்ட 18 மாவட்டங்களில் இன்று திங்கட்கிழமை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் நிலையில் நேற்று மட்டும் ஒரே 15

## பனையிலிருந்து தவறிவிழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

### இளவாலை உயரப்புலத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
பனையில் இருந்து தவறி விழுந்த குடும்பஸ்தர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் இளவாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் உயரப்புலம் இளவாலை பகுதியைச் 16

## மதுபானசாலைகளை திறக்க அனுமதி

(கொழும்பு)
நாடளாவிய ரீதியில் அனுமதி பெற்றுள்ள மதுபானசாலைகளை மீள திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் பகுதி 16

கொரோனாவிலிருந்து குணமடைந்த

### அரியாலையைச் சேர்ந்த நால்வர்

## நேற்று வீடு திரும்பினர்



(யாழ்ப்பாணம்)
பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் கண்காணிப்பிலிருந்த நிலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி வெலிகந்த வைத் 15

## யாழ்.மாவட்டத்துக்கான ஊரடங்கை மேலும் 7 நாட்களுக்கு நீடிக்குக

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்துக்கான ஊரடங்குச் சட்டத்தை மேலும் 7 நாட்களுக்கும் நீடிக்கமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அனுப்பி வைகைகப்படடுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட் 15

# சிகை அலங்கரிப்பு நிலையங்கள்

## கடைப்பிடிக்க வேண்டிய அறிவுறுத்தல்கள்



நீண்ட நாட்களாக அமுலில் இருந்த ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளதால் பெருமளவானோர் சிகை அலங்கரிப்பு நிலையங்களை (சலூன்களை) அணுகவுள்ளனர். இது ஒரு ஆபத்தான நிலையாகும்.

கொரோனா தொற்று ஆபத்துக்களை தவிர்ப்பதற்காக பின்வரும் நடைமுறைகளை அமுல்படுத்துமாறு வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.

1. சலூன்களுக்குள் இருவருக்கிடையில் ஒரு மீற்றர் சமூக இடைவெளியைப் பேணவும்.

2. முடி திருத்துநர்கள் கட்டாயமாக முகக் கவசம் அணிந்திருத்தல் வேண்டும்.

3. முடி திருத்துநர்கள் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் சிகை அலங்கரிப்பு செய்த பின் கைகளை சரியான முறையில் ஓடும் நீரில் சவர்க்காரம் கொண்டு கழுவ வேண்டும்.

4. மொத்தமாக பணியில் உள்ள முடி திருத்துநர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாடிக்கையாளரை உள்ளே அனுமதிக்கவும். உதாரணமாக முடி திருத்துநர்கள் இருவர் பணியில் இருந்தால் முடி வெட்டிக் கொண்டிருப்பவர்கள் இருவரும் காத்திருப்பவர் இருவரும் என நான்கு வாடிக்கையாளர்களை மட்டுமே உள்ளே அனுமதிக்கவும். கடையின் அளவு சிறிதாயின் காத்திருக்கும் வாடிக்கையாளரின் எண்ணிக்கையை மேலும் குறையுங்கள்.

5. ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் பாவிக்கும் உபகரணங்கள் அனைத்தையும் ஸ்பிறிற் மூலம் அல்லது கொதிக்கும் நீரில் அமிழ்த்தி தொற்று நீக்கம் செய்யவும். தொற்று நீக்கம் செய்ய முடியாத உபகரணங்களைப் பாவிப்பதை இயன்றவரை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

6. போர்வை, துவாய், பிளேட் போன்றவற்றை வழமைபோல் ஒருவருக்கு ஒன்று எனப் பாவிக்கவும். பிளேட்டை ஒருவருக்குப் பாவித்தபின் எறியவும். துவாய்கள், போர்வைகளை தோய்த்து உலர்ந்த பின்பே பாவிக்கவும் என அவர் தெரிவித்தார். (ம-3)

# நீதிமன்ற நடவடிக்கைகளை

## இன்று முதல் ஆரம்பிக்குமாறு அறிவுறுத்தல்

கொரோனா தொற்றால் நிறுத்தப்பட்டுள்ள நீதிமன்ற நடவடிக்கைகளை இன்று (திங்கட்கிழமை) முதல் மீண்டும் ஆரம்பிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற சேவை ஆணைக்குழு சபையால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபம் ஊடாக இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றம், சிவில் மேன் முறையீட்டு நீதிமன்றம், வர்த்தக நீதிமன்றம், மாவட்ட நீதவான் நீதிமன்றம், தொழில் நீதிமன்றங்களை உள்ளடக்கும் வகையில் குறித்த சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது. (ம-3)

# கொரோனா COVID - 19

## இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை

| தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் | சிகிச்சை பெற்று வருபவர்கள் |
|---|---|---|---|
| 271 | 096 | 007 | 168 |

## உலகளாவிய ரீதியில் நாளாந்த நிலைமை ஒரே பார்வையில்...

| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 2,389,924 | 613,881 | 164,246 |

| நாடுகள், உலகம் | மொத்த பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | மொத்த மரணம் | இன்றைய மரணம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 2,389,924 | 59,158 | 164,246 | +4,199 |
| ஐ.அமெரிக்கா | 756,856 | 18,064 | 40,131 | +1,117 |
| இத்தாலி | 178,972 | 3,047 | 23,660 | +433 |
| ஸ்பெய்ன் | 195,944 | 1,528 | 20,453 | +410 |
| சீனா | 82,735 | 16 | 4,632 | 0 |
| ஜேர்மனி | 144,406 | 682 | 4,548 | +10 |
| பிரான்ஸ் | 152,578 | 785 | 19,718 | +395 |
| ஈரான் | 82,211 | 1,343 | 5,118 | +87 |
| ஐ.இராச்சியம் | 120,067 | 5,850 | 16,060 | +596 |
| இந்தியா | 17,615 | 1,250 | 556 | +35 |

இன்று அதிகாலை 12.10 நிலைவரப்படி

# யாழில் ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் அத்தியாவசிய தேவைக்காக மட்டும் பொதுமக்கள் வெளியே வரவேண்டும்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சமூக மட்டத்தில் கொரோனாத் தொற்று ஏற்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கான பரிசோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் அத்தியாவசியத் தேவைகளுக்காக வெளியே வருபவர்களைத் தவிர ஏனையவர்கள் இயலுமானவரை வெளியில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவுறுத்தினார்.

இன்று வடமாகாணம் முழுவதும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படவுள்ள நிலையில்

கொரோனாத் தொற்றும் வாய்ப்புள்ள அசாதாரண நிலை நிலவுவதன் காரணமாக பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த அறிக்கையில் மேலும்,

நாட்டில் கொரோனா அபாயம் முற்றாக நீங்கும் வரை ஏனைய மாவட்டங்களிலும் வெளியில் நடமாடுவதை இயன்றவரை குறைத்துக் கொள்ளுங்கள். மிகவும் அவசியமான தேவைகளற்று வெளியில் செல்வது சிறுசிறு விடயங்களுக்காக பல தடவை வெளியில் செல்வது போன்றவற்றை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

சன நெருக்கமான இடங்கள், சன நெருக்கமான போக்குவரத்துச் சேவைகள் போன்றவற்றை இயன்றவரை தவிர்த்துக் கொள்ளுங்கள். தவிர்க்கமுடியாத இடத்து அத்தியாவசியத் தேவை கருதி வெளியில் செல்வதாயின் கட்டாயமாக ஒரு மீற்றர் சமூக இடைவெளியைப் பேணவும்.

பொதுப் போக்குவரத்துச் சேவையிலீடுபடும் வாகனங்கள் அனைத்திலும் அனுமதிக்கப்பட்டுள்ள பயணிகளின் எண்ணிக்கையில் அரைவாசிப் பேர் மட்டுமே பயணம் செய்ய வேண்டும். அனைத்து வாகனங்களையும் தினமும் கிருமித் தொற்று நீக்கத்துக்கு உட்படுத்தவும்.

அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், ஏனைய பொது மக்கள் அல்லது பணியாளர்கள் எனப் பலர் கூடக்கூடிய இடங்களில் பொருத்தமான, உரிய கை கழுவும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் அவற்றைக் கட்டாயமாக்கிக் கொள்ளவும் மேலும் தனிநபர்களுக்கிடையிலான சமூக இடைவெளியைப் பேணுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

ஒன்று கூடல்கள், கூட்டங்கள், சுற்றுலாக்கள், சமய நிகழ்வுகள், பொது வழிபாடுகள், கோயில் திருவிழாக்கள், விளையாட்டு நிகழ்வுகள், வீட்டு வைபவங்கள் போன்றவை மறு அறிவித்தல் வரை தடைசெய்யப்பட்டுள்ளன என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

வெளியில் சென்று வீட்டுக்குத் திரும்பும் போதெல்லாம் நன்றாக குளித்தல் நல்லது. ஆகக் குறைந்தது கைகளையாவது சரியான முறையில் ஓடும் நீரில் சவர்க்காரம் கொண்டு கழுவுங்கள். வீட்டிலுள்ள போதும் அடிக்கடி கைகளை உரிய முறையில் கழுவுங்கள். மேலும் கண், மூக்கு, வாய், முகம் போன்றவற்றைத் தொடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு கொரோனா தொற்றுக்குரிய அறிகுறிகளாகிய தொண்டை நோ, வறட்டு இருமல், காய்ச்சல் போன்ற அறிகுறிகள் ஏதும் ஏற்பட்டால் முகக்கவசம் அணிந்து கொண்டு உடனடியாக அருகிலுள்ள அரச வைத்தியசாலையை அணுகுங்கள் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-18)

# விடுதலைக்கான பயணத்தில் கொரோனாவின் தாக்கம் சிறிய தாமதமேயன்றி தடையல்ல - சிறீதரன் உறுதி







(கிளிநொச்சி)

எமது இனத்தின் விடுதலைக்கான பயணத்தில் கொரோனா வைரஸின் தாக்கம் சிறிய தாமதமேயன்றி தடையல்ல எனத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

தேசத்தின் விடுதலைக்காக உண்ணா நோன்பிருந்து தன் உயிர்தந்த தியாக தீபம் அன்னை பூபதியின் 32 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கிளிநொச்சி அலுவலகமான அறிவகத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1988களில் சிங்கள ஆட்சியாளர்களினதும் அதனோடு இணைந்த உதவிப்படைகளின் ஆக்கிரமிப்பின் கீழ் எங்கள் தேசம் சிக்கித்தவித்தது.

மரண ஓலமே எம்மண்ணை நிறைத்திருந்தது. மரணங்கள் மலிந்த பூமியாக நாம் வதைபட்டபோது அன்னை பூபதி அகிம்சைக் களத்திலே தன்னை அர்ப்பணித்தார்.

தர்மம் மிகுந்த வாழ்வை தமிழர்கள் பெற வேண்டும் என்பதற்காக தன் உயிர் தேசத்தின் தாயாக அவர் பரிணமித்தார். கடந்த 32 ஆண்டுகளாக அந்தத் தாய் தாங்கிய கனவுகளோடு பயணிக்கின்றோம். போராட்ட வழிமுறைகள் மாறினாலும் இலட்சியம் மாறாது பயணிக்கின்ற இவ்வேளையிலே மரணங்கள் மலிந்துபோயுள்ளது.

வல்லரசுகள் நிலைகுலைந்து போயிருக்கின்றன. ஒவ்வொரு அரசுகளும் தேசிய இனங்களும் தர்மத்தை நேசிக்கின்ற, தேடுகின்ற காலம் உருவாகியிருக்கிறது. 1989 ஆம் ஆண்டுகளின் பின்னர் 23 நாடுகள் சுதந்திரம் அடைந்திருக்கின்றன. உலகம் இன்று இருளில் சூழ்ந்திருக் கின்றது. புதிய சிந்தனைகளை புதிய பாதைகளை புதிய பொருளா தார தேர்வுகளை புதிய உலக ஒழுங்கினைப் பற்றிச் சிந்திப்பதற்காக கொரோனா வைரஸ் அடிகோலியிருக்கிறது.

எனவே, தமிழ்த்தேசிய இனமாகிய நாங்கள் போரை, சுனாமியை, பொருளாதாரத்தடையை பன்னாட்டு அரசுகளின் அழுத்தங்களை எதிர்கொண்ட வண்ணம் சுயநிர்ணய பாதையில் பயணித்துக்கொண்டிருக்கும் போது கொரோனா வந்திருக்கிறது.

இதனை எதிர்கொள்வோம் வெற்றி கொள்வோம் என்கின்ற திடசங்கற்பத்தோடு அன்னை பூபதி காட்டிய அறப்பாதையில் தொடர்ந்தும் பயணிப்போம். ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் பாதையில் இந்தக் கொரோனா வைரஸின் தாக்கம் தாமதமே அன்றி தடையல்ல என்பதை ஒன்றுபட்ட சக்தியாக நின்று வெற்றி கொள்வதே அன்னை பூபதியின் இலட்சிய தாகத்தை வென்றெடுப்பதற்கான திடசங்கற்பமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வில் ஈகச்சுடரினை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஏற்றிவைத்து அன்னையின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலையையும் அணிவித்தார்.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், உபதவிசாளர் தவபாலன், கட்சியின் கிளிநொச்சி மாவட்டக்கிளையின் செயலாளர் விஜயன் உள்ளிட்ட செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.(இ-312)

# கொரோனாவால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர் எண்ணிக்கை 6 இலட்சத்தை நெருங்குகிறது



(ஜெனிவா)

உலகம்முழுவதும்கொரோனா வைரஸ் தாக்குதலில் சிக்கி குணமடைந்தோர் எண்ணிக்கை 6 இலட்சத்தை நெருங்குகிறது.

சீனாவின் வுஹான் நகரில் கடந்தாண்டுடிசெம்பரில்கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் தற்போது உலகின் 210 நாடுகளுக்குப் பரவி பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் இந்த வைரஸ்க்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கும் முயற்சி நடைபெற்று வந்தாலும் மருத்துவத் துறையினரின் தன்னலமற்ற சேவையால் வைரஸ் பாதிப்பிலிருந்து பலர் மீண்டு வந்த வண்ணமுள்ளனர்.

இந்நிலையில் உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சையின் பின்னர் குணமடைந்தோர் எண்ணிக்கை 6 இலட்சத்தை நெருங்குகிறது.

நேற்று நண்பகல் நிலவரப்படி, 5 இலட்சத்து 99 ஆயிரத்து 960 இற்கு மேற்பட்டோர் குணமடைந்தனர். மேலும், 23 இலட்சத்து 32 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் 15 இலட்சத்து 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஐரோப்பிய நாடுகளைப் புரட்டியெடுக்கும் வைரஸ்

# இங்கிலாந்தில் கொரோனாவால் 15 ஆயிரத்தைத் தாண்டிய பலி

## ஒரு இலட்சத்து 14 ஆயிரம் பேர் பாதிப்பு

(லண்டன்)

இங்கிலாந்தில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் 888 பேர் பலியாகினர். இதனால் அங்கு கொரோனாவுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 15 ஆயிரத்தைத் தாண்டியது.

உலகம் முழுவதும் 210 நாடுகளுக்கு கொரோனா வைரஸ் பரவியது. நேற்றுக்காலை நிலவரப்படி 23 இலட்சத்து 23 ஆயிரம் பேருக்கு மேல் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளைப் புரட்டியெடுத்து வருகிறது. ஐரோப்பிய நாடுகளில் இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ்க்கு அடுத்தபடியாக கொரோனா தற்போது இங்கிலாந்தில் நிலை கொண்டுள்ளது.

இந்நிலையில் நேற்றுக்காலை 9 மணி நிலவரப்படி இங்கிலாந்தில் ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 217 பேருக்கு வைரஸ் பரவியது. குறிப்பாக நேற்று முன்தினம் ஒரே நாளில் புதிதாக 5 ஆயிரத்து 525 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும் அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரேநாளில் 888 பேர் பலியாகினர். இதனால் அந்நாட்டில் கொரோனாவுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 15 ஆயிரத்து 464 ஆக அதிகரித்தது.

கொரோனாவால் பலியானோர் எண்ணிக்கை 15 ஆயிரத்தைக் கடந்துள்ளதால் இங்கிலாந்து மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். (இ)



# கொரோனா வைரஸை சர்வதேச சமூகம் எவ்வாறு கையாண்டது என்பது குறித்து சுயாதீன விசாரணைகள் அவசியம்

## அமெரிக்கா வழியில் ஆஸி



(சிட்னி)

கொரோனா வைரஸை சர்வதேச சமூகம் எவ்வாறு கையாண்டது என்பது குறித்த சுயாதீன விசாரணைகள் அவசியம் என அவுஸ்திரேலியா வேண்டுகோள் விடுத்தது.

அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் மரைஸ்பெய்ன் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

உலக சுகாதார ஸ்தாபனம் இந்த நெருக்கடியை எவ்வாறு கையாண்டது என்பது குறித்த ஆய்வும் அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

சீனாவின் வுஹானில் உருவான வைரஸ் நெருக்கடியை சீனா எவ்வாறு கையாண்டது என்பது உட்பட சர்வதேச விசாரணைகள் அவசியம் எனவும் அவுஸ்திரேலிய அமைச்சர் தெரிவித்தார்.

இந்த வைரஸின் தோற்றம், அதனை கையாள்வதில் பின்பற்றப்பட்ட அணுகுமுறைகள், தகவல்கள் எவ்வாறு வெளிப்படைத்தன்மையுடன் பகிரப்பட்டன என்பது குறித்த விபரங்களை எங்களுக்குத் தெரியப்படுத்தக்கூடிய சுயாதீன ஆய்வு அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

உலக சுகாதார ஸ்தாபனம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி வெளியிட்ட கரிசனைகளை அவுஸ்திரேலியா பகிர்ந்துகொள்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் காரணமாக அவுஸ்திரேயாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான உறவுகள் மாற்றமடைப்போகின்றன எனத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர், சீனாவின் வெளிப்படைத் தன்மை குறித்த கரிசனைகள் உச்சத்தில் உள்ளன எனவும் தெரிவித்தார்.

இதேவேளை அவுஸ்திரேலியாவின் சுகாதார அமைச்சரும் சுயாதீன விசாரணைகளுக்கான வேண்டுகோளை விடுத்தார்.

பெப்ரவரி முதலாம் திகதி நாங்கள் சீனப் பிரஜைகளுக்குத் தடைவிதித்தவேளை அதிகாரிகள் மட்டத்திலிருந்தும், ஜெனிவாவிலுள்ள உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகளிடமிருந்தும் எதிர்ப்புக்கள் எழுந்தன ஏன்பது எங்களுக்குத் தெரியும் என அவர் கூறினார்.

போலியோ உட்பட ஏனைய நோய்களுக்கு எதிராக உலக சுகாதார ஸ்தாபனம் சிறப்பாகச் செயற்பட்ட போதிலும் · கொரோனா வைரஸை அது கையாண்ட விதம் உலகத்திற்கு நன்மையை ஏற்படுத்தவில்லை எனவும் அவுஸ்திரேலியாவின் சுகாதார அமைச்சர் கிரெய்க் ஹன்ட் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதில் அவுஸ்திரேலியா குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றது என அவுஸ்திரேலியா சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கு நாங்கள் எங்கள் சொந்த முடிவுகளை எடுத்தமையே காரணம் எனவும் அவர் தெரிவித்தார். (இ)

# கொரோனா சிகிச்சைக்காக மருந்து வழங்கிய இந்தியாவுக்கு ஐ.நா.பொதுச் செயலர் பாராட்டு

(நியூயோர்க்)

கொரோனா சிகிச்சைக்காக வெளிநாடுகளுக்கு மருந்து அனுப்பியதற்காக இந்தியாவுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்ரேரஸ் பாராட்டு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் நோய்க்கு சிகிச்சையளிப்பதற்கான மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் இந்தியா,அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் விஞ்ஞானிகளும் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

மலேரியா காய்ச்சலைக் குணப்படுத்த உதவும் ஹைட்ராக்சி குளோரோகுயின் மாத்திரைகள் கொரோனா நோயாளிகளைக் குணப்படுத்த உதவுவதாக கண்டறியப்பட்டது. இந்த மாத்திரைகள் இந்தியாவில் அதிகளவில் தயாரிக்கப்படுகின்றன.

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாக பரவத் தொடங்கியதால், இந்த மாத்திரைகளை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு தடை விதித்தது.

இதற்கிடையே, கொரோனாவைக் கட்டுப்படுத்த ஹைட்ராக்சி குளோரோகுயின் மாத்திரைகளை தங்களுக்கு வழங்கவேண்டும் என அமெரிக்கா, நேபாளம், இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகள் இந்தியாவைக் கேட்டுக் கொண்டன. இதனால் ஹைட்ராக்சி குளோரோகுயின் ஏற்றுமதிக்கு இருந்து வந்த தடையை மத்திய அரசு நீக்கியது.

இதையடுத்து, இந்த மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் அந்த மாத்திரைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றன.

மனித குலத்துக்கு அச்சுறுத்தலாக விளங்கும் கொரோனா பெருந்தொற்று நோய் என்பதால் அதை ஒழிக்க அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து போராட வேண்டும். இந்த விடயத்தில் ஒவ்வொரு நாடும் தன்னால் இயன்ற உதவிகளை மற்ற நாடுகளுக்கு செய்ய வேண்டும் என ஐ.நா. பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்நிலையில் கொரோனா சிகிச்சைக்காக வெளிநாடுகளுக்கு மருந்து அனுப்பியதற்காக இந்தியாவுக்கு ஐ.நா.பொதுச் செயலாளர் பாராட்டு தெரிவித்தார்.

இதேபோன்று கொரோனாவை ஒழிக்க மற்ற நாடுகளுக்கு உதவும் நாடுகளுக்கும் அவர் பாராட்டு தெரிவித்தார் என அவரது செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் துஜாரிக் தெரிவித்தார். (இ)

# பாகிஸ்தானில் கொரோனா பாதிப்பு 7 ஆயிரத்து 500 ஐ தாண்டியது

## 140 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கொரோனா வைரஸ் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அங்கு 7 ஆயிரத்து 500 ஐ தாண்டியது.

பாகிஸ்தானில் கொரோனா பாதிப்பு நாளுக்கு நாள் அதி கரித்து வருகிறது. ஊரடங்கு உத்தரவு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்ற போதிலும் கொரோனாவும் தனது ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து வருகிறது. குறிப்பாக அங்கு மசூதிகளில் ஒன்று கூடுபவர்களை தடுத்து நிறுத்த அரசு போராடி வருகிறது.

புதிதாக 400இற்கும் அதிகமானோருக்கு கொரோனா தொற்று உறுதியான நிலையில் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அங்கு 7 ஆயிரத்து 500 ஐ தாண்டியது. மேலும் கொரோனா வைரஸ் 140 இற்கும் அதிகமானோரின் உயிரைப பறித்தது குறிப்பிடத்தக்கது.(இ)

# கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக பாகிஸ்தானுக்கு அமெரிக்கா நிதியுதவி

(இஸ்லாமாபாத்)

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக பாகிஸ்தானுக்கு நிதியுதவி அளிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

கொரோனா தொற்றால் அமெரிக்கா, ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, ஈரான் ஆகிய நாடுகள் கடுமையான பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

பாகிஸ்தானிலும் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகரித்து வருகிறது. அங்கு கொரோனா வைரஸ் பாதித்தவர்களின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 500 ஐ எட்டியது.

அங்கு வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கை மேலும் 2 வாரங்களுக்கு நீடித்து பிரதமர் இம்ரான்கான் அண்மையில் உத்தரவிட்டார்.

ஏற்கனவே கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் பாகிஸ்தான் அரசு, ஊரடங்கால் ஏற்பட்டிருக்கும் பொருளாதார இழப்பை ஈடுகட்ட முடியாமல் திணறி வருகிறது.

எனவே ஏற்றுமதி துறை, இரசாயன உற்பத்தி ஆலைகள், மின் வணிகம், மென்பொருள் மேம்பாடு மற்றும் காகிதம், சிமெண்டு தொழிற்சாலைகள் மற்றும் உர ஆலைகள் ஆகியவற்றுக்கு ஊரடங்கிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போதிய நிதி இல்லாமல் பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான அரசு தவித்து வருகிறது.

இந்த நிலையில் கொரோனா வைரஸ் பாதிப்பை எதிர்த்து போராட பாகிஸ்தானுக்கு 84 லட்சம் அமெரிக்க டொலர்கள் (இந்திய மதிப்பில் ரூ.64 கோடியே 24 இலட்சம்) நிதியுதவி அளிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதர் பால் ஜோன்ஸ் வெளியிட்டார்.இது தொடர்பாக வெளியிடப்பட்ட காணொலி பதிவில் ,

8 மில்லியன் டொலருக்கும் அதிகமான புதிய பங்களிப்புக்களுடன், நாடு முழுவதும் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கவும், பாதிக்கப்பட்ட மக்களைக் கவனித்துக்கொள்ளவும் பாகிஸ்தான் அரசாங்கத்துடன் அமெரிக்கா ஒத்துழைக்கிறது.

கொரோனா பாதிப்பை கண்டறிதல், அதை தடுத்தல் உள்ளிட்ட பணிகளுக்காக இந்த நிதி செலவு செய்யப்படவுள்ளது. மேலும் கொரோனாவால் ஏற்படும் அவசர நிலையை சமாளிக்கவும், இந்த நிதியை பயன்படுத்தலாம்.

பாகிஸ்தானில் பெருமளவு கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துள்ள நிலையில், மக்களை காக்க நிதி அவசியம். அமெரிக்கா அறிவித்துள்ள இந்த நிதியுதவி அந்த நாட்டிற்கு பெருமளவு உதவியாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# “நாங்கள் ஆட்டு மந்தைகள் இல்லை”

# ஊரடங்கு உத்தரவுக்கு எதிராக அமெரிக்காவில் ஆர்ப்பாட்டங்கள்










(வோஷிங்டன்)

கொரோனா வைரஸைக் கட்டுப் படுத்துவதற்காக அறிவிக்கப்பட்ட ஊர டங்கு உத்தரவுக்கு எதிராக அமெரிக்கா வின் பல பகுதிகளில் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வரு கின்றன.

டெக்சாஸ் மேரிலாண்ட் உட்பட பல பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன.

டெக்சாஸ் தலைநகரில் நூற்றுக் கணக்கானவர்கள் ஒன்றுகூடி கொடி களை ஏந்தியபடி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

ஊரடங்கை உடன் நீக்குங்கள் என அவர்கள் கோசமிட்டனர். மேரிலாண் டில் கார்களுக்குள் இருந்தபடி நகரத் தைச் சுற்றிவந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

மேரிலாண்டை மீளத் திறவுங்கள் என அவர்கள் கோசமிட்டனர்.

கொலம்பசிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.இதன்போது “நாங்கள் ஆட்டு மந்தைகள் இல்லை” என ஆர்ப் பாட்டக்காரர்கள் கோசமிட்டனர்.

கொரோனா வைரஸை கட்டுப் படுத் துவதற்காக பரந்துபட்ட முடக்கல் நிலை காரணமாக பெருமளவு அமெரிக்க மக்கள் வேலைவாய்ப்புக்களை இழந் தனர்.

அடுத்த சில மாதங்களுக்கு மேல் தங்களின் சிறிய வர்த்தகம் தாக்குப் பிடிக்காது என பல அமெரிக்கர்கள் கவலையடைந்துள்ளனர்.

அதிகரிக்கும் பொருளாதார நெருக் கடிகள் குறித்தும் அவர்கள் கவலை யடைந்துள்ளனர்.

எனினும் முடக்கலை உடனடியாக விலக்க வேண்டிய அவசியமில்லை என பெரும்பான்மையினர் கருதுவது கருத் துக்கணிப்புக்களின் மூலம் தெரிய வந்தது.

கருத்துக்கணிப்பொன்றில் கலந்து கொண்ட மூன்றில் இரண்டுபேர் மாநில அரசாங்கங்கள் விரைவாக ஊரடங்கு உத்தரவைத் தளர்த்தினால் கொரோனா வைரஸ் தொற்று அதிக ரிக்கும் என அவர்கள் அச்சம் வெளி யிட்டனர்.

இதேவேளை ஜனாதிபதியும் அவ ருக்கு ஆதரவான ஊடகங்களும் ஊர டங்கு உத்தரவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங் களைத் தூண்டும் விதத்தில் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# இந்தியாவில் கொரோனாவால் இதுவரை 500 பேர் உயிரிழப்பு

## 15 ஆயிரத்து 700 பேர் பாதிப்பு



(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிப்ப டைந்தோர் எண்ணிக்கை நேற் றுக்காலை 15 ஆயிரத்து 712 ஆக உயர்ந்தது.

அதேவேளை கொரோனா வால் உயிரிழந்தோர் எண் ணிக்கை 500 ஆக அதிகரித்தது என மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை தெரிவித் தது.

கொரோனா வைரஸ் தொற் றைக் கட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தியா முழுவதும் மே 3 ஆம் திகதி வரை ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டது.

ஆனாலும் கொரோனா தொற்று அறிகுறியுடன் வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டவர்களுக்கு அடுத்தடுத்து நோய்த்தொற்று உறுதி செய்யப்படுவதால் கடந்த சில நாட்களாக பாதிக்கப்பட் டவர்களின் எண்ணிக்கை அதி கரித்துக் கொண்டே வருகி றது.


இந்நிலையில் இந்தியாவில் கொரோனா தொற்றால் பாதிப் படைந்தோர் எண்ணிக்கை 15 ஆயிரத்து 712 ஆக அதிகரித்தது என மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நேற்றுத் தெரிவித்தது.

இது தொடர்பாக மத்திய சுகா தாரத்துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில், இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய் யப்பட்டவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 712 ஆக உயர்ந் தது.

மேலும் கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து குணமடைந் தோர் எண்ணிக்கை 2,230 ஆகவுள்ளது. அதேபோன்று கொரோனாவால் பலியானோர் எண்ணிக்கை 500 ஆக அதி கரித்தது என மேலும் தெரிவிக் கப்பட்டது. (இ)

# மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை

## பிரதமர் மோடி அறிவுரை



(டில்லி)

கொரோனா வைரஸ் பாதிப்பு குறித்து பொது மக்கள் அச்சம் கொள்ளத் தேவை யில்லை என்று பிரதமர் நரேந்திர மோடி தனது டுவிட் டரில் தெரிவித்தார்.

இதேவேளை நாடு முழுவ தும் உணவு தானியங்கள் போதுமானளவு வழங்கப்படும் என்று பொதுமக்களுக்கு பிர தமர் மோடி உறுதியளித் தார்.

கொரோனா வைரஸ் கார ணமாக பிறப்பிக்கப்பட்ட ஊர டங்கு உத்தரவு காலத்தின் போது பொதுமக்கள் யாரும் பீதியடைய வேண்டாம் என் றும் பிரதமர் மோடி கேட்டுக் கொண்டார்.

மத்திய உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் ராம் விலாஸ் பாஸ் வானின் டுவிட்டை பகிர்ந்து கொண்ட பிரதமர், தனது டுவிட்டரில், “பொது மக்கள் யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

தயவு செய்து உரிய முன் னெச்சரிக்கை நடவடிக்கை களை எடுப்போம்.

ஒன்றாக இருந்து கொரோனா தொற்றை தோற் கடிப்போம்” என்று பதிவிட் டார். (இ)

# சீனாவில் உருவாக்கப்பட்டதா கொரோனா?

## அமெரிக்கா தீவிர விசாரணை - ட்ரம்ப் அறிவிப்பு

**(வோஷிங்டன்)**

**சீன ஆய்வு கூடத்தில் கொரோனா வைரஸ் செயற்கையாக உருவாக்கப்பட்டதா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இது குறித்து அமெரிக்கா தீவிர விசாரணை நடத்தி வருவதாக அந்நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.**



உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ், சீனாவின் மத்திய நகரமான வுஹானிலுள்ள கடல்வாழ் உயிரினங்கள் விற்பனை சந்தையிலிருந்து உருவானது என்று நீண்ட காலமாக கூறப்பட்டு வருகிறது.

இதுகுறித்த தகவல்கள் வெளியுலகுக்கு தெரியத்தொடங்கியதும் அந்தச் சந்தை மூடப்பட்டது. இன்றுவரை அந்தச் சந்தை திறக்கப்படவே இல்லை. மூடித் தான் கிடக்கிறது. இந்நிலையில் "கொரோனா வைரஸ் இயற்கையானது அல்ல, சீனாவில் வுஹான் நகரிலுள்ள ஆய்வுகூடத்தில் உருவாக்கப்பட்டது" என்று அமெரிக்காவின் 'பாக்ஸ் நியூஸ்' பிரத்தியேக செய்தி ஒன்றை வெளியிட்டு உலகமெங்கும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. இது தொடர்பாக அமெரிக்கா விரிவான விசாரணை நடத்தி வருவதாகவும் அது தெரிவித்தது.

இதுபற்றிய செய்தியை பாக்ஸ் நியூஸ் வெளியிட்டபோது, "அவர்கள் (சீனர்கள்) ஒரு குறிப்பிட்ட வகையான வெளவாலைப் பற்றி பேசுகிறார்கள். ஆனால் அந்தப் பகுதியில்அந்த வெளவால்இல்லை. ஈரமான அந்தப் பகுதியில் அந்த வெளவால் விற்பனை செய்யப்படவும் இல்லை. 40 மைல் தொலைவில் தான் அந்த வெளவால் உள்ளது.

அரசாங்கத்துக்கு தெரிந்த தகவல்களின் கால வரிசையைக் கருத்தில் கொண்டு, உளவுத் துறையினர் விசாரணை நடத்துகிறார்கள். என்ன? நடந்தது என்று ஒரு துல்லியமான காட்சியை உருவாக்குகிறார்கள் என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன" என்று பாக்ஸ் நியூஸ் டெலிவிஷன் கூறியது.

இந்நிலையில் வோஷிங்டன் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ட்ரம்ப், ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது இந்த விவகாரம் எதிரொலித்தது.

அப்போது அவரிடம் ஊடகவியலாளர்கள், "வுஹான் ஆய்வு கூடத்திலிருந்து கொரோனா வைரஸ் பரவியது என்று வெளியான தகவல் தொடர்பாக அமெரிக்கா விசாரணை நடத்துகிறதா?" என்று கேள்வி எழுப்பினர். அதற்கு ட்ரம்ப் விரிவாகப் பதிலளித்தார்.

அதில் அர்த்தம் இருப்பதாக தெரிகிறது. நாங்கள் அதை விசாரிக்கின்றோம். நிறையப் பேர் அதை விசாரித்து வருகிறார்கள். நிறைய விநோதமான விடயங்கள் நடக்கின்றன. நிறைய விசாரணைகளும் நடந்து கொண்டிருக்கின்றன. நாங்கள் நடந்தது என்ன? என்று கண்டுபிடிக்கப் போகின்றோம்.

சீனாவில் அந்த வைரஸ் எங்கிருந்து வந்திருந்தாலும் எந்த வடிவத்தில் வந்திருந்தாலும் அதன் காரணமாக இப்போது 210 நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வுஹானிலுள்ள அந்த 4 ஆம் நிலை ஆய்வுகூடத்துக்கு அமெரிக்கா வழங்கி வந்த நிதி உதவியை நிறுத்திக்கொள்ளும். ஒபாமா நிர்வாகம்தான் அந்த ஆய்வுகூடத்துக்கு 3.7 மில்லியன் டொலர் (சுமார் ரூ.27 கோடியே 75 இலட்சம்) நிதி வழங்கியது. அந்த நிதியை விரைவில் நிறுத்துவோம் என ட்ரம்ப் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகூடத்துக்கான நிதியை நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தின் இரு சபைத் தலைவர்களையும் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு மத்தியில் அமெரிக்க எம்.பி. ஜேம்ஸ் சுமித், "கொரோனா வைரஸ் விவகாரத்தை மூடி மறைப்பதில் சீனா ஈடுபட்டுள்ளது. இந்த வைரஸைத் தடுக்காமல் சீன கம்யூனிஸ்டு அரசு பரவ வைத்து விட்டது.

இது சுதந்திர உலகின் ஆரோக்கியத்துக்கும் ஸ்திரத்தன்மைக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இதில் அவர்களை பொறுப்பேற்க வைக்க வேண்டும்" என்று கூறியிருப்பது பரபரப்பை மேலும் அதிகரிப்பதாக அமைந்துள்ளது.(இ)

# பிறந்தநாளுக்கு யாருமே வராததால் கவலைப்பட்ட சிறுவன் வாகனங்களில் அணிவகுத்து வந்து வாழ்த்திய பொலிஸார்

## அமெரிக்காவில் நெகிழ்ச்சி சம்பவம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கொரோனா அச்சம் காரணமாக பிறந்தநாள் விழாவிற்கு யாருமே வராததால் கவலையில் இருந்த சிறுவனுக்கு பொலிஸார் வந்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அமெரிக்காவில் கொரோனா வைரஸ் கொன்று குவித்து வருகிறது.

நோய் அறிகுறி உள்ளவர்கள், அவர்களுடன் தொடர்பில் இருப்பவர்கள் எனப் பல இலட்சம் மக்கள் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டனர். பொது நிகழ்ச்சிகள் எதிலும் பங்கேற்க முடியாமல் மக்கள் வீடுகளிலேயே முடங்கியுள்ளனர்.

இந்நிலையில் கொரோனா அச்சம் மற்றும் ஊரடங்கு காரணமாக பிறந்தநாள் விழாவிற்கு யாரும் வராததால் கவலையில் இருந்த ஒரு சிறுவனுக்கு, பொலிஸார் வாகனங்களில் அணிவகுத்து வந்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

வீட்டில் எளிமையாக பிறந்தநாள் கொண்டாடிய சிறுவனை வாழ்த்த, நண்பர்கள், உறவினர்கள் யாரும் வராததால் கவலை அடைந்துள்ளான்.


இதனைக் கவனித்த அவனது தந்தை, பொலிஸாருக்குத் தொடர்பு கொண்டு தெரிவித்தார். இதையடுத்து பொலிஸார்ரோந்து வாகனங்களில் சிறுவனின் வீட்டுக்கு அணிவகுத்து வந்தனர்.

வீட்டின் முன்பு வாகனங்களை நிறுத்திய அவர்கள், சிறுவனுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர். சைரன்களை ஒலித்தும் ஹப்பி பர்த்டே பாடலைப் பாடியும் சிறுவனை மகிழ்வித்தனர்.

இது தொடர்பான காணொலி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

இந்தக் காணொலியை இந்தி நடிகர் ரித்தேஷ் தேஷ்முக் தனது சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து 'அமெரிக்க பொலிஸ் துறையினரின் அற்புதமான செயலைப் பாருங்கள்' எனப் பதிவிட்டார்.

இந்தக் காணொலிக்கு ஏராளமானோர் விருப்பம் தெரிவித்ததோடு பகிர்ந்து வருகின்றனர்.(இ)



# பிரான்ஸில் கொரோனாவுக்காக அவசர வரவு - செலவுத் திட்டம்

## நாடாளுமன்றம் ஒப்புதல்

(பாரிஸ்)

பிரான்ஸில் கொரோனா வைரஸால் ஏற்பட்ட சரிவிலிருந்து நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் தாக்கல் செய்யப்பட்ட வரவு - செலவுத் திட்டத்திற்கு நாடாளுமன்றத்தின் கீழ்சபை ஒப்புதல் வழங்கியது.

பிரான்ஸில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது. இந்நிலையில் கொரோனா வைரஸால் ஏற்பட்ட சரிவிலிருந்து நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் அவசர பட்ஜெட் தயாரிக்கப்பட்டது.


120 பில்லியன் டொலர் (சுமார் 9 இலட்சம் கோடி) மதிப்பிலான இந்த பட்ஜெட்டுக்கு பிரான்ஸ் நாடாளுமன்றத்தின் கீழ்சபை தனது ஒப்புதலை வழங்கியது. இந்த பட்ஜெட்டானது, நாளை செவ்வாய்க்கிழமை மேல்சபையின் ஒப்புதலுக்கு செல்கிறது. இந்த பட்ஜெட், மருத்துவ ஊழியர்களுக்கு போனஸ் வழங்கவும் போராடும் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பங்களுக்கு நிதியுதவி செய்யவும் சிவில் விமான போக்குவரத்து மற்றும் கார் உற்பத்தித் துறைக்கு உதவிகள் வழங்கிடவும் உதவும்.

உலகின் முக்கிய பொருளாதார நாடுகளில் ஒன்றான பிரான்ஸில் நடப்பு ஆண்டில் கொரோனாவால் பொருளாதார வளர்ச்சி 9 சதவீதம் வரை குறையும் என எச்சரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)

# அமெரிக்காவை ஆட்டிப்படைக்கும் கொரோனா 40ஆயிரத்தைக் கடந்தது பலி எண்ணிக்கை!

(நியூயோர்க்)

**அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரேநாளில் ஆயிரத்து 867 பேர் பலியாகினர். இதனால் அங்கு கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 40 ஆயிரத்தைக் கடந்தது.**






அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரேநாளில் ஆயிரத்து 867 பேர் பலியாகினர். இதனால் அங்கு கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 40 ஆயிரத்தைக் கடந்தது.

உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸ் இதுவரை 23 இலட்சத்து 30 ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்களுக்குப் பரவியது.

வைரஸ் பரவியவர்களில் 15 இலட்சத்து 73 ஆயிரத்து 25 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 55 ஆயிரத்து 265 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.

மேலும் வைரஸ் பரவியவர்களில் இதுவரை 5 இலட்சத்து 96 ஆயிரத்து 482 பேர் சிகிச்சைக்குப் பின் குணமடைந்தனர்.

ஆனால், இந்தக் கொடிய கொரோனாவுக்கு உலகம் முழுவதும் நேற்றுக் காலை நிலவரப்படி ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

இதற்கிடையில் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது அமெரிக்காவைப் புரட்டியெடுத்து வருகிறது.

உலகளவில் வைரஸால் பாதிப்பு மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

இந்நிலையில் கொரோனா தாக்குதலுக்கு அந்நாட்டில் பலியானோர் எண்ணிக்கை நேற்று 40 ஆயிரத்தைக் கடந்தது.

அமெரிக்காவில் 7 இலட்சத்து 38 ஆயிரத்து 792 பேருக்கு வைரஸ் பரவியது. குறிப்பாக நேற்று முன்தினம் ஒரே நாளில் புதிதாக 29 ஆயிரத்து 57 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும் அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரேநாளில் ஆயிரத்து 867 பேர் பலியாகினர். இதனால் அமெரிக்காவில் கொரோனாவுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 39 ஆயிரத்து 14 ஆக அதிகரித்தது.

இந்நிலையில் நேற்றுக் காலை நிலவரப்படி அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்பு 40 ஆயிரத்தைக் கடந்தது.அமெரிக்காவில் இந்தக் கொடிய வைரஸ் பரவியவர்களில் இதுவரை 68 ஆயிரத்து 269 பேர் குணமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## கொரோனாவைப் பயன்படுத்தி இந்தியப் பெருநிறுவனங்களை வாங்குவதற்கு சீனா முயற்சி!



(டில்லி)

கொரோனாவைப் பயன்படுத்தி இந்தியப் பெருநிறுவனங்களின் பங்குகளை சீனா வாங்கி வந்த நிலையில் நேரடி அந்நிய முதலீட்டிற்கு மத்திய அரசு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பங்குச்சந்தையில் இந்தியப் பெரு நிறுவனங்களின் பங்கு மதிப்புக்கள் அனைத்தும் வேகமாகச் சரிந்து வருகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெளிநாட்டு நிறுவனங்கள் இந்திய நிறுவனங்களின் பங்குகளை வாங்கி அவற்றைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயற்சித்து வருகின்றன.

குறிப்பாக சீனாவின் மத்திய வங்கி கடந்த மார்ச் மாதத்திற்குள் இந்தியாவின் எச்டிஎப்சி நிறுவனத்தின் 1.01 சதவிகித பங்குகளை வாங்கியது.

சீனாவின் இந்த நடவடிக்கை இந்தியப் பெரு நிறுவனங்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

கொரோனாவைப் பயன்படுத்தி இந்திய நிறுவனங்களில் ஆதிக்கம் செலுத்த சீனா முயற்சிப்பதாகவும் அதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையேல் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என காங்கிரஸின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

இந்நிலையில் இந்திய நிறுவனங்களின் பங்குகளில் வெளிநாட்டு நிறுவனங்கள் நேரடியாக முதலீடு செய்யவேண்டும் என்றால் மத்திய அரசிடம் முன் அனுமதி கேட்கவேண்டும் என்ற நடைமுறை புதிதாக அமுல்படுத்தப்பட்டது.

சீனாவை குறிவைத்து அமுல்படுத்தப்பட்ட இந்த நடைமுறையின் படி இந்தியாவுடன் எல்லைகளை பகிர்ந்துள்ள நாடுகள் இந்திய நிறுவன பங்குகளில் முதலீடு செய்ய வேண்டும் என்றால் மத்திய அரசிடம் உரிய அனுமதி பெற வேண்டும்.

அந்நிய முதலீட்டு நடைமுறையில் கொண்டுவரப்பட்ட இந்தத் திருத்தம் வெளிநாட்டு நிறுவனங்கள் குறிப்பாக சீனா, இந்திய நிறுவனங்களில் முதலீடு செய்து பங்குகளை வாங்கித் தாங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நினைத்த திட்டம் முறியடிக்கப்பட்டது.

இதற்கிடையில் தான் விடுத்த எச்சரிக்கையையடுத்து இந்திய பங்குச்சந்தையில் முதலீடு செய்யும் சீன நிறுவனங்களை கட்டுப்படுத்தும் விதமாக நேரடி அந்நிய முதலீட்டின் நடைமுறையில் மாற்றம் கொண்டுவந்த மத்திய அரசுக்கு ராகுல் காந்தி நன்றி தெரிவித்தார். (இ)

## ஸ்பெயினில் கொரோனாவால் உயிரிழப்பு 20,700 ஆக உயர்வு ஊரடங்கு மே - 9 வரை நீடிப்பு

(மட்ரிட்)

கொரோனா வைரஸால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் மூன்றாவது இடத்திலுள்ள ஸ்பெயினில் ஊரடங்கு உத்தரவு மே 9 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

சீனாவின் வுஹான் நகரில் உருவான கொரோனா வைரஸ் உலகிலுள்ள 210 இற்கும் அதிகமான நாடுகளில் பரவி பேரிழப்பை ஏற்படுத்திவருகிறது.

இந்தக் கொடிய வைரஸுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க பல நாடுகளின் விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

கொரோனா வைரஸின் தாக்கத்தில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அதைத் தொடர்ந்து இத்தாலியும் ஸ்பெயினும் இருந்து வருகின்றன.



இந்நிலையில் கொரோனா வைரஸால் அதிகம் பாதிக்கப்பட்ட ஸ்பெயினில் ஊரடங்கு உத்தரவு மே 9 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

இதுதொடர்பாக ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்ஷே தெரிவிக்கையில், கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் அதைக் கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு மே 9 ஆம் திகதி வரை நீடிக்கப்படுகிறது எனத் தெரிவித்தார்.

ஸ்பெயினில் கொரோனா வைரஸால் பலியானோர் எண்ணிக்கை நேற்றுக்காலை நிலவரப்படி 20 ஆயிரத்து 700 ஆக உயர்ந்தது குறிப்பிடத் தக்கது.(இ)

## சுகாதாரத்துறை செயலிழக்கும் அபாயம்



(டோக்கியோ)

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரிப்பதால் ஜப்பானின் சுகாதாரத் துறை செயலிழக்கும் ஆபத்து உருவாகியுள்ளது என வைத்தியர்கள் எச்சரித்தனர்.


கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க வேண்டியதன் காரணமாக ஜப்பான் வைத்தியசாலைகளின் அவசர சேவை பிரிவுகள் பிற நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்க முடியாத நிலையில் உள்ளன என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை ஜப்பானில் இதுவரை 200 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# புத்தாண்டு இராசி பலன்கள்

## 14.04.2020 - 13.04.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்பிரி சிங்காரம்



சார்வரி வருடத்தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் 10ம் இடத்தில் குருவோடு இணைந்து குரு-மங்கள யோகத்தை உருவாக்குகிறார். உங்கள் இராசியில் பஞ்சம ஸ்தானாதிபதி சூரியன், உச்சம் பெற்றிருக்கிறார். தன ஸ்தானத்தில் சுக்ரன் சொந்த வீட்டில் பலம்பெற்று சஞ்சரிக்கிறார். பிதுர்ரார்ஜித ஸ்தானமான 9ஆம் இடத்தில் சனி, சந்திரன், கேது ஆகிய மூன்று கிரகங்களும் இணைந்திருக்கின்றன. இதனால் கூட்டுக்கிரக யோகமும், சனி - சந்திர யோகமும் உருவாகிறது. சகாய ஸ்தானத்தில் ராகுவும், விரயஸ்தானத்தில் புதனும் வீற்றிருக்க, புத்தாண்டு தொடங்குகிறது. நான்கு கிரகங்கள் நல்ல நிலையில் சஞ்சரிக்கின்றன. 6இற்கு அதிபதி புதனும், 12 இற்கு அதிபதியான குருவும் நீசம் பெற்றிருப்பது யோகம் தான். வருடத் தொடக்கமே வசந்தமாக அமையும்.

### ராகு-கேது பெயர்ச்சி

1.9.2020 அன்று உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்திற்கு ராகுவும், 8 ஆம் இடத்திற்கு கேதுவும் பெயர்ச்சியா கிறார்கள். எனவே சேமிப்பு உயரும். பாதியில் நின்ற பணிகள் மீதியும் தொடரும். மனக்குழப்பம் அகலும். கேதுவால் விரயங்கள் அதிகரிக்கும். குடும்பச் சுமை கூடும். சுப விரயங்களை ஏற்படுத்தி கொள் ளலாம். ஆரோக்கியத்தில் மட்டும் அடிக்கடி அச்சுறுத்தல் ஏற்படும். மருத்துவ ஆலோசனைகளை பெறுவது நல்லது.

### குருப்பெயர்ச்சி

15.11.2020 அன்று மகர ராசிக்கு குருபகவான் பெயர்ச்சியாகிறார். 12 ஆம் இடத்திற்கு அதிபதியான குரு, அங்கு நீசம் பெறுவதால் யோகம் சேரும். விரயாதிபதி நீசம் பெறுவதால், சில நன்மைகளை செய்வார். குரு 9ஆம் இடத்திற்கும் அதிபதி என்பதால், தந்தை வழியில் கொஞ்சம் அனுசரித்து செல்லுங்கள். சொத்துக்களில் முறையான பங்கீடு கிடைக்காது. அதேநேரம் குடும்பப்பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். சுப காரியங்கள் பல, இல்லத்தில் நடைபெறும். தாயின் உடல் நலம் சீராகும். பகையை வெல்வீர்கள். தொழில் புரிபவர்களுக்கு, பணியாளர் தொல்லை அகலும்.

### சனிப்பெயர்ச்சி

26.12.2020 அன்று சனிப்பெயர்ச்சி நிகழ இருக்கிறது. அன்றைய தினம் உத்தராடம் 2ஆம் பாதத்தில், உங்கள் இராசிக்கு பத்தாம் இடமான மகர இராசிக்கு வாக்கிய கணித பஞ்சாங்கம் ரீதியாக சனி பகவான் பெயர்ச்சியாகிறார். தொழிலில் தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். அளவோடு நடந்த தொழில் இனி ஆதாயம் தரும் விதத்தில் நடக்கலாம். அரசு வேலை கிடைப்பதற்கான சூழ்நிலை தென்படும். பெற்றோரின் உடல் நலத்தில் கவனம் தேவை.




### குரு வக்கிரமும், அதிசாரமும்

13.5.2020 முதல் 7.7.2020 வரை குரு பகவான் அதிசாரமாகி வக்ரம் பெற்று சஞ்சரிக்கிறார். 8.7.2020 முதல் 9.9.2020 வரை தனுசு இராசியில் குருவக்ர இயக்கத்தில் இருக்கிறார். அதே நேரத்தில் சனியும் வக்கிர கதியிலேயே அவரோடு இணைந்து சஞ்சாரம் செய்கிறார். மீண்டும் குருபகவான் 6.4.2021 இல் கும்ப ராசிக்கு அதிசாரத்தில் செல்கிறார். இவற்றின் விளைவாக வரும் மாற்றங்கள், நன்மை வழங்கும். சில நேரம் மனதை குழப்பமடையவும் செய்யும் வழிபாடுகள் அவசியமான தருணம் இது.

### வழிபாடு

சதுர்த்தி திதி அன்று விநாயகரை வழிபட்டு வருவதோடு, யோகபலம் பெற்ற நாளில் வைத்தீஸ்வரன் கோவில் சென்று தரிசனம் செய்து வாருங்கள்.

### பெண்களுக்கு

ஆண்டின் தொடக்கம் அற்புதமாக அமையும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பணப்புழக்கம் அதிகரிக்கும். இல்லத்தில் மங்கல ஓசையும், மழலையின் ஓசையும் கேட்கும். குடும்ப முன்னேற்றம் கூடும். உறவுகளின் ஆதரவு கிடைக்கும். பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் கிடைக்கும். இடம் வாங்கும் யோகம் உண்டு. குரு, சனி வக்ர காலங்களில் கவனம் தேவை.



சார்வரி வருடத்தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன், உங்கள் ராசியிலேயே பலம்பெற்று சஞ்சரிக்கிறார். அவரை 9-ம் இடத்தில் நீசம் பெற்று சஞ்சரிக்கும் குரு பார்க்கிறார். அது ஒருவகைக்கு நன்மை தான். குரு-மங்கள யோகம், சனி - சந்திர யோகம், சூரியன் உச்சம், குரு மற்றும் புதன் நீசம், 2-ம் இடமான தன ஸ்தானத்தில் ராகு வீற்றிருக்க, சார்வரி ஆண்டு தொடங்குகிறது. எனவே பொருளாதார நிறைவை காண்பீர்கள். எதிர்பார்த்த மாற்ற ங்கள் வந்துசேரும். அஷ்டமத்து சனியால் தொழில் வெற்றியாகும். ஆரோக்கிய தொல்லையில் மட்டும் அலட்சியம் வேண்டாம்.

### ராகு-கேது பெயர்ச்சி

1.9.2020 அன்று ராகு உங்கள் இராசிக்கும், கேது 7ஆம் இடத்திற்கும் பெயர்ச்சியாகிறார்கள். இதனால் சர்ப்பதோஷம் உருவாகிறது. எனவே யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்தி பரிகாரம் செய்யுங்கள். ஜென்மத்தில் ராகு வருவதால், பெரிய மனிதர்கள் தொடர்பு கிடைக்கும். அலைச்சல், மனக்குழப்பம் அதிகரிக்கும். நேர்மறை சிந்தனையை வளர்த்து கொள்ளுங்கள். 7ஆம் இடத்து கேதுவால் குடும்பப் பிரச்சினை கூடும். அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்லுங்கள். திருமணத்தடை வரலாம். பிறரை நம்பி பொறுப்பை ஒப்படைக்காதீர்கள். விரயங்களும், மாறுதல்களும் ஏற்படும்.

### குருப்பெயர்ச்சி

15.11.2020 அன்று மகர ராசிக்கு குருப்பெயர்ச்சியாகி செல்கிறார். அது குருவுக்கு நீச்ச வீடு. உங்கள் ராசிநாதனுக்கு, குரு பகை கிரகம். அவர் வலிமை இழக்கும்போது வருமானம் பெருகும். நினைத்தது நிறைவேறும். மனக்குழப்பம், தடைகள் விலகும். ஆரோக்கிய தொல்லைகள் அகலும். குருவின் பார்வை 1, 3, 5 ஆகிய இடங்களில் பதிவதால், தொழில் வளம் சிறப்பாக இருக்கும். நேர்மறை சிந்தனை தேவை. தள்ளிப்போன சுப நிகழ்ச்சிகள் தானாக நடைபெறும். பயணங்களும், அவற்றால் ஆதாயமும் உண்டு. நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே நடைபெறும். சொத்துப்பிரச்சினை முடிவுக்கு வரும். அடகு நகையை மீட்பீர்கள்.

### சனிப்பெயர்ச்சி

26.12.2020 அன்று வாக்கிய பஞ்சாங்கப்படி சனிப்பெயர்ச்சி நடக்கிறது. உங்களுக்கு அஷ்டமத்து சனியாக இருந்தவர், அதில் இருந்து விலகி 9-ம் இடமான சொந்த வீட்டில் சஞ்சரிக்கப்போகிறார். விரும்பிய காரியங்கள் எல்லாம் துரிதமாக நடைபெறும். உறவினர்களுடனான மனக்கசப்பு நீங்கும். மருத்துவ செலவு குறையும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவு கிடைக்கும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.




### குரு வக்கிரமும், அதிசாரமும்

13.5.2020 முதல் 7.7.2020 வரை மகர இராசியில் குருபகவான் அதிசாரமாகி வக்கிரம் பெறுகிறார். 8.7.2020 முதல் 9.9.2020 வரை தனுசு ராசியில் குரு வக்கிர கதியில் இருக்கிறார். இக்காலத்தில் சனிபகவானும் குருவோடு இணைந்து வக்ர கதியிலேயே தனுசு இராசிக்குள் உலாவருகிறார். மீண்டும் குரு பகவான் 6.4.2021இல் கும்ப ராசிக்கு அதிசாரமாக செல்கிறார். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு குருபகை கிரகம் என்பதால் அதிசார காலத்தில் யோக பலன் நடக்கும். நினைத்ததை முடிப்பீர்கள்.

### வழிபாடு

வெள்ளிக்கிழமை விரதமிருந்து அம்பிகையை வழிபாடு செய்தால் நலங்களும், வளங்களும் சேரும்.

### பெண்களுக்கு

சுபச்செய்திகள் அதிகம் நடைபெறும் ஆண்டு இது. ராகு-குரு-சனி ஆகிய மூன்று கிரகங்களும், உங்களை முன்னேற்ற பாதையில் அழைத்து செல்லப்போகிறது. குடும்ப ஒற்றுமை பலப்படும். பொருளாதார பற்றாக்குறை அகலும். தாயின் ஆதரவு தக்க விதத்தில் கிடைக்கும். புதிய வேலையில் ஆர்வம் காட்டுவீர்கள். ஆபரண சேர்க்கை உண்டு. குருப்பெயர்ச்சி மற்றும் ராகு-கேது, சனிப்பெயர்ச்சி காலங்களில் சிறப்பு பரிகாரங்களை செய்யுங்கள்.

(தொடரும்)

# ஊரடங்கில் உதவிய உறவுக் கரங்கள்



குப்பிழான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகத்தினரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீட 11 வது அணியினரும் இணைந்து ஊரடங்கு உத்தரவின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் மாவட்டங்களில் வசிக்கும் மக்களுக்கு உதவிகளை வழங்கியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான உதவிகளை ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் ஊடாக ஒட்டுசுட்டான், வித்தியாபுரம், தட்டயமனை, மணவாளன்பட்டமுறிப்பு கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மக்களுக்கு ஒரு இலட்சம் பெறுமதியிலும் , கொக்குத் தொடுவாய் பிரிவில் ஐம்பது ஆயிரம் பெறுமதியிலும், மன்னார் உயிர்த்தராசன்குளம் பகுதியில் மாணவர்கள் குடும்பங்களுக்கு ஐம்பதாயிரம் பெறுமதியிலும் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. மேலும் உரும்பிராயில் 20 குடும்பங்கள் , குப்பிழானில் 49 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கிவைத்தனர். தொடர்ந்து கழக அங்கத்தவராக உள்ளவர்களுக்கும் மற்றும் கிராமத்தில் மிக கஷ்டப்பட்ட குடும்பத்திற்கும் உதவிகளை வழங்க கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான நிதியுதவிகளை குப்பிழான் கிராமத்தைச் சேர்ந்த தற்போது புலம்பெயர்ந்து வசிக்கும் இ.கணேசலிங்கம் குடும்பத்தினர் மற்றும் இ.மோகன் குடும்பத்தினர் வழங்கி உதவியுள்ளனர். இவ் உதவிக்கான ஒழுங்கமைப்பினை விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகத்தினர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவுவதனைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசினால் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் காரணமாக நாளாந்த உழைப்பில் வாழ்ந்து வந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்களின் நாளாந்த உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதில் கடும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர்.

இந்த நிலையில் பல்வேறு தரப்பினர்களும் இவ்வாறான குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றனர். அந்த வரிசையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியின் கிளிநொச்சி கரைச்சி, பளை, பூநகரி பிரதேச சபையின் சுயேட்சைக்குழு 19 உறுப்பினர்களும் தங்களின் ஒரு மாதக் கொடுப்பனவைக் கட்சியின் இடர் முகாமைத்துவக் குழுவிடம் வழங்கியுள்ளர்.

அத்தோடு கட்சியின் அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் உள்ளிட்ட பலர் பொருட்களாகவும்,



நிதியாகவும் கட்சியின் இடர் முகாமைத்துவக் குழுவிடம் வழங்கியுள்ளனர்.

இதனைக் கொண்டு உலருணவுப் பொருட்கள் மற்றும் மரக்கறிகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டு நாளாந்த உழைப்பில் வாழ்ந்து வந்து தற்போது ஊரடங்குச் சட்டம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட தொண்டர்கள் நேரடியாகச் சென்று வழங்கி வருகின்றனர். ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள போதும் மாவட்டச் செயலகம் பொலிஸ் த்ரப்பின் விசேட அனுமதி பெற்று சமத்துவக் கட்சியினர் இப்பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச்சட்டம் காரணமாக நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள அன்றாட உணவுக்கு கஷ்டப்படும் குடும்பங்களுக்கு தேவையான அத்தியாவசிய உலர் உணவுப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.





ஊரடங்கு சட்டம் காரணமாக தினக்கூலி வேலைக்கு செல்ல முடியாது அன்றாட வாழ்வாதாரத்திற்காக போராடிய பனிக்கர்புளியங்குளம், பறநாட்டாங்கல், தாலிக்குளம், வாரிக்குட்டியூர், உக்கிளாங்குளம், பண்டாரிக்குளம், வேப்பங்குளம், 60 ஏக்கர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு வவுனியா குகன் மோட்டர்ஸ் மற்றும் சில்வா அன்கோ ஆகிய நிறுவனங்களின் நிதிப்பங்களிப்பில் ஊடகவியலாளர்களால் அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நெடுந்தீவு பிரதேச் செயலாளர் எவ்.சி.சத்தியசோதியின் சிபார்சுக்கமைவாக நெடுந்தீவு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட 6 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் வாழும் 351 குடும்பங்களுக்கு உலருணவு நிவாரணப் பொதிகள் நண்பர்கள் வட்டத்தின் அங்கத்தவர்களால் நேரடியாக வீடுகளுக்கு கொண்டு சென்று வழங்கப்பட்டன.



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2015

Search for people, places and things

### துளசி




இஞ்சி, பூண்டு, மிளகு இதெல்லாம் அதிகமாகச் சாப்பிட்டா கொரானாவுக்கு நல்லது. நாம எதுக்கு டாக்டர் கொரோனாவுக்கு நல்லது பண்ணனும்

### சசிராஜ்




ஒரு நிமிசம் வரைக்கும் கையைக் கழுவனும். பன்டி, உன் சோப் என்ன சிலோவா? கொரோனா வைரஸ் வரக்கூடாதுன்னா மூடிட்டு கழுவு

### மேகலா



யோவ் ஒரே இருமல், தும்மல், காய்ச்சலா இருக்குயா, அட திருட்டுப் பயபுள்ள கொரோனான்னு சொல்லி கழட்டிவிடப் பாக்கிறியா?

### சரண்




இலங்கையில கொரோனாவால பாதிக்கப்பட்டவரை விட Dialog கொரோனா Caller Tune ஆல பாதிக்கப்பட்டவர்தான் அதிகம்

### அபிலாஸ்



நெஞ்சாங்கூட்டில் நீயே நிற்கிறாய்... யாரு மாப்ள காதலியா சளி மாமா சளி...

### சுமதி



தம்பி இது கொரோனா பூமி இங்க போன் பண்ணா லவ் சோங் எல்லாம் வராது லொக்கு லொக்குன்னு இருமுற சத்தம்தான் வரும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பொதுமக்கள் பொறுப்புடனும் பாதுகாப்புடனும் செயற்பட்டு அரசாங்கத்திற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்



## காமினி லொக்குகே கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் முழுமையாக இல்லாதொழிக்கப்படவில்லை. இருப்பினும் அனைத்துச் சவால்களையும் எதிர்கொண்டு வெற்றிபெற வேண்டும் என்பதால் ஊரடங்குச் சட்டம் பகுதியளவில் நீக்கப்பட்டது.

எனவே, பொது மக்கள் பாதுகாப்புடனும் பொறுப்புடனும் செயற்பட்டு அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே கோரிக்கை விடுத்தார்.

முஸ்லிம் சமுகத்தைத் தொடர்புபடுத்தி எதிர்த்தரப்பினர் பரப்பும் வதந்திகள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கவை. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் போது அனைத்து இன மக்களின் பாதுகாப்புக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு இறந்த ஒருவரது இறுதிச் சடங்குகள் முஸ்லிம் சமூகத்தின் சம்பிரதாயங்களுக்கு அமைய இடம் பெறவில்லை என ஒரு தரப்பினர் ஆரம்பத்தில் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டனர்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களுக்கு உரிய முறையில் இறுதிச் சடங்கு செய்ய முடியாமல் போனது. இதில் நான்கு சமயத்தவர்களும் உள்ளடங்குகின்றார்கள்.

எனவே, நெருக்கடி நிலைமையைக் கருத்திற் கொண்டு அனைவரும் செயற்பட வேண்டும் என பிரதமர் மகிந்த அனைத்துத் தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்தார்.

கொரோனா வைரஸ் ஊடாக எதிர்த்தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்ள முயற்சிக்கின்றார்கள்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைத்து இன மக்களும் வேறுபாடுகளின்றி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மக்களின் இயல்பு வாழ்க்கை மே மாதம் முதல் வாரத்தில் இருந்து வழமைக்குக் கொண்டுவரப்படும்.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டாலும், சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் கடினமான முறையில் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

கொரோனா வைரஸ் நாட்டிலிருந்து முழுமையாக இல்லாதொழிக்கப்படவில்லை. அனைத்துச் சவால்களையும் வெற்றிகொள்ள வேண்டும் என்பதற்காகவே ஊரடங்குச் சட்டம் பகுதியளவில் நீக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

# கொரோனா சோதனை பற்றிய என் கருத்தை எஸ்.பி.திஸாநாயக்க திரிக்கிறார் - மனோ காட்டம்

## "அவரது தலையையும் சோதனை செய்ய வேண்டும்"



(கொழும்பு)

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை தொடர்பில் நான் தெரிவித்த கருத்தை அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க திரித்து பேசுகிறார். அதைப் பிடித்துக் கொண்டு ஒரு தேரர் என்னைக் கைது செய்ய வேண்டும் என்று சி.ஐ.டியில் சென்று முறையீடு செய்கிறார்.

இவர்களைப் பொறுத்தவரையில் தேசிய பிரச்சினைகள் தொடர்பாக "நாங்கள்" எதுவும் பேசக்கூடாது என நினைக்கிறார்கள் என முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் காட்டமாகத் தெரிவித்தார்.

இந்நாட்டில் 40 ஆயிரம் கொரோனா நோயாளிகள் **(Corona Positive)** இருப்பதாக நான் கூறவேயில்லை. 40 ஆயிரம் "முதல் தொடர்பாளர்கள்" **(First Contact Persons)** இருக்கின்றார்கள் என்ற நான் கூறினேன். "முதல் தொடர்பாளர்கள்" என அறியப்பட்டவர்கள் கொரோனா நோயாளிகளுடன், தம் நாளாந்த வாழ்வில் நேரடியாகச் சம்பந்தப்பட்டு ஒன்றாக வாழ்ந்து, இருந்து, உண்டு வாழ்ந்தவர்களாகும். "முதல் தொடர்பாளர்கள்" என்றுதான் இவர்களை வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

இந்த "முதல் தொடர் பாளர்கள்" பற்றி எங்களுக்கு யார் சொன்னது? மார்ச் 24 ஆம் திகதியன்று அலரிமாளிகையில் பிரதமர் தலைமையில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தான் தனது உரையில், இதைக் கூறினார்.

இராணுவ, பொலிஸ் புலனாய்வாளர்கள் வீடு வீடாக போய், தெருத்தெருவாக போய், கொரொனா நோயாளிகளுடன் தொடர்பில் இருந்தவர்கள் யாரென அடையாளம் கண்டுள்ளார்கள் என அவர் மேலும் கூறினார்.

இது முக்கியமான ஒரு பணி. இதையிட்டு நான் பாதுகாப்புத் துறையைப் பாராட்டுகின்றேன்.

சில அரசாங்க அரசியல் வாதிகள், மனோ கணேசனுக்கு எப்படி இந்த அரசாங்க இரகசிய தகவல்கள் கிடைக்கின்றன எனக் கேட்கிறார்கள். கடவுளே, இவை இரகசிய தகவல்கள் இல்லை. கட்சித் தலைவர் கூட்டத்தில் பகிரங்கமாக இராணுவத் தளபதி கூறியதாகும்.

நான் கூட்டங்களுக்குப் போனால், அங்கு தூங்குவதில்லை. கூட்டங்களில் பேசப்படுவது அனைத்தையும் காது கொடுத்து கேட்கின்றேன்.

என்னிடம் கேள்வி கேட்கும், இந்த அரசாங்க அரசியல் வாதிகள், கட்சித் தலைவர்கள் அல்ல. இதனால், இவர்கள் இந்தக் கூட்டங்களுக்கு வருவதில்லை. இதற்கு நான் என்ன செய்ய முடியும்?

சீன அரசு, 40 ஆயிரம் பரிசோதனை கருவிகளை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளதாக அறிந்துள்ளேன். இந்த முதல் தொடர்பாளர்களை, இந்தப் பரிசோதனைக் கருவிகளைப் பயன்படுத்தி பரிசோதிக்கும்படி நான் அரசாங்கத்தைக் கோருகின்றேன்.

கொரோனா நோயாளர்கள் இருந்தால், அவர்கள் இந்தப் பிரிவிற்குள்தான் அதிகமாக இருக்க முடியும். எனவே, அவர்களை முதலில் சோதியுங்கள் எனக் கூறுகின்றேன். சோதனை வேகத்தை அதிகரியுங்கள் எனவும் கூறுகின்றேன்.

இதை நான் மட்டும் கோரவில்லை. அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் உட்பட அனைத்து வைத்திய சமூகமே இதைத்தான் சொல்கிறது.

தொடர்ந்து இப்படி முகத்தை மூடிக்கொண்டு வீடுகளுக்குள் இருக்க முடியாது. நாட்டைத் திறந்து விட வேண்டும். ஆனால், அதற்கு முன் மக்களுக்கு நம்பிக்கையளிக்க வேண்டும். எனவே, சோதனைகளை அதிகரியுங்கள்.



நான் சொல்வதைச் சரியாகப் புரிந்துக்கொள்ள முடியாத அமைச்சர் எஸ்பி.திஸாநாயக்க, நான் சொல்லாததைந் சொன்னதாகக் கூறுகிறார்.

பொய் சொல்கிறார். எனவே, கொரோனா நோயாளர்கள் பரிசோதிக்கப்படுவதைப் போன்று, அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் தலையையும் சோதனை செய்ய வேண் டும் என்று நான் நினைக்கின் றேன் என மனோ கணேசன் மேலும் தெரிவித்தார். (இ)

## காட்டு யானைகள் அட்டகாசம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச் செயலகப் பிரிவுக்குட்பட்ட மணவாளன்பட்ட முறிப்பு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள மேழிவனம் கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது

குறிப்பாக குறித்த பகுதி வனப்பகுதியின் மத்தியில் காணப்படுகின்ற நிலைமையில் அப் பகுதியில் 32 குடும்பங்களுக்கு மேல் வாழ்ந்து வருகின்றனர். இந்த பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ள நிலையில் யானை வேலி அமைத்து தருமாறு பன்னெடுங்காலமாக மக்கள் கோரிக்கை விடுக்கின்ற போதும் இதுவரை அந்த இடத்திற்கான யானை வேலிகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

இந்நிலையில் குறித்த பகுதியில் நேற்றிரவு காட்டு யானையினால் வீடு ஒன்று உடைக்கப்பட்டு வீட்டினுடைய அறையினுள் இருந்த 25 பை நெல்லை உணவாக உட்கொண்டு சென்றுள்ளது.

இரவு வேளையில் வீட்டில் உள்ளவர்கள் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் வீட்டிற்கு அருகில் வந்த யானை வீட்டின் முன்புற யன்னல் கண்ணாடியை உடைத்து குறித்த பகுதியில் நெல் இல்லாத நிலையில் நெல் இருந்த அறையினை உடைத்து வீட்டிற்குள் இருந்த 25 பை நெல்லை உணவாக உட்கொண்டு சென்றுள்ளது. (இ)

# இலங்கை அரசியலமைப்பும் 19 வது திருத்தம் சம்பந்தமான விமர்சனங்களும்



08

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

**(20.03.2020 ஆம் திகதிய தொடர்ச்சி...)**

பதினெட்டாவது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி சரத்து 54(1) நீக்கப்பட்டு அது பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது. பகிரங்க சேவை ஆணைக்குழு ஜனாதி பதியால் நியமனம் செய்யப்படும். இதன் உறுப்பினர்களில் ஒருவர் தவிசாளராக ஜனாதிபதியால் நியமனம் செய்யப்படுவார்.

பதினேழாவது திருத்தத்தில் பகிரங்க சேவை அரசியலமைப்பு பேரவையின் சிபாரிசுக்கு இணங்க ஜனாதிபதியால் உருவாக்கப்பட்டது. பதினெட்டாவது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி ஜனாதிபதி தனது அறிவிற்குட்பட்டு பகிரங்க சேவை ஆணைக்குழுவினை உருவாக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றப் பேரவைக்கு பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தும் அதிகாரம் வழங்கப்படவில்லை. பகிரங்க சேவை ஆணைக்குழுவினை நியமிப்பதில் இதுவரை ஜனாதிபதிக்கு இருந்து வந்த தடை இப்போது நீக்கப்பட்டுள்ளது. இதனால் சுதந்திரமான பகிரங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாடு இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

பதினேழாவது திருத்தத்தில் சரத்து 55 பகிரங்க சேவையாளர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, பதவி நீக்கம் என்பன பகிரங்க சேவை ஆணைக்குழுவிடம் விடப்பட்டிருந்தது. இவ் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறு இருப்பினும் எல்லாத் திணைக்களத் தலைவர்களினதும் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, பதவிநீக்கம் என்பன அமைச்சரவைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். அமைச்சர்கள் ஆணைக்குழுவின் கருத்தினைக் கேட்டறிந்து கொண்டபின்னர் இவ் அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டும் எனக் கூறுகின்றது.

பதினெட்டாவது அரசியலமைப்புத் திருத்தத்தில் சரத்து 55 நீக்கப்பட்டு பின்வரும் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. அமைச்சர்கள் பகிரங்க சேவையாளர்கள் தொடர்பான எல்லாக் கொள்கை விடயங்களுக்கும் பொறுப்பாளர்களாகும். அதாவது பகிரங்க சேவையாளர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காறுக்கட்டுப்பாடு, பதவி நீக்கம் உட்பட அனைத்து விடையங்களையும் செய்தலும், தீர்மானித்தலும் அமைச்சரவையாகும். மேலும் எல்லா திணைக்களத் தலைவரகளினதும் நியமனம் பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக்கட்டுப்பாடு, பதவிநீக்கம் என்பன பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்குரித்தானதாகும்.

பகிரங்க சேவை அலுவலர்கள் தொடர்புடைய கொள்கை விடயங்கள் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட அனுமதிக்கப்படுகின்றது. திணைக்களத் தலைவர்களின் விடயங்களை கையாளுவதற்கு பகிரங்க சேவை ஆணைக்குழுவின் கருத்துக்களை கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை அமைச்சரவைக்கு இருக்கவில்லை. இது பகிரங்க சேவை ஆணைக்குழுவின் சுதந்திரமான செயற்பாட்டை வலுவிழக்கச் செய்கிறது.

### தேர்தல்கள் ஆணைக்குழு

இலங்கையின் நடைமுறையிலுள்ள அரசியலமைப்பிற்குக் கொண்டுவரப்பட்ட பதினேழாவது திருத்தத்தின் உறுப்புரை 104(B) யின் முதலாம் பந்தி தேர்தல் ஆணைக்குழு அல்லது தேர்தல் ஆணையாளரின் அதிகாரங்கள் தொடர்பாகக் கூறுகின்றது. பதினேழாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் உறுப்புரை 104(B) (4)(A) தேர்தலொன்று நடத்தப்படுகின்ற காலப்பகுதிக்குள் அரசிற்கு அல்லது அரச கூட்டுத்தாபனங்களுக்குரிய ஏதேனும் அசையும் அல்லது அசையாச் சொத்துக்கள் ஏதேனும் அரசியல் கட்சியை அல்லது சுயேட்சைக் குழுவை தேர்ந்தெடுப்பதற்கான அல்லது ஊக்குவிப்பதற்கான அல்லது தடுப்பதற்கான நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அல்லது தேர்தல் ஆணையாளருக்குரியதாகும் எனக் கூறுகின்றது. உறுப்புரை 104 (B) (4) (B) தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படுகின்ற விதிகளைச் செயற்படுத்துவது அரசாங்கச் சொத்துக்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து உத்தியோகத்தர்களதும் கடமையாகும் எனக் கூறுகின்றது. உதாரணமாக உறுப்புரை 104 வழங்கிய அதிகாரத்தைப் பயன்படுத்தி 2009 , 2010 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களில் பொதுச்சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் சுற்று நிருபங்களைத் தேர்தல் ஆணையாளர் வெளியிட்டிருந்தார். இச் சுற்றுநிருபங்கள் வானூர்திகள் உட்பட அரசிற்குச் சொந்தமான அனைத்து வாகனங்கள், அரசிற்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகள், விடுமுறை விடுதிகள், வாடிவீடுகள், அரசினால் பராமரிக்கப்படும் கட்டடங்கள், அரசிற்குச் சொந்தமான கட்டடங்கள், அமைச்சர்களுக்கும் அரச நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் வசதிகள் பொதுமக்களின் தேவைகளுக்குப் பயன்படுத்தவென ஒதுக்கப்பட்ட பொதுநிதி, பொதுநிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், அரசநிதியில் சுயமாக இயங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்கள், அரசபடைகள், பொலிஸார், அரச வெகுசனத் தொடர்பு சாதனங்கள், ஏனைய பொதுச் சொத்துக்கள் ஆகியவற்றைப் பொதுச்சொத்துக்களாக அடையாளப்படுத்தியிருந்தன. மேலும் தேர்தல் காலங்களில் புதிய அரச நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் போன்றன வழங்கப்படக்கூடாது எனவும் தேர்தல் ஆணையாளர் அரசாங்கத்தினை நெறிப்படுத்தியிருந்தார்.

### தேர்தல் காலங்களில் ஏற்படக்கூடிய விளைவுகள்

பதினேழாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் உறுப்புரை 104 B (4) (A) பந்தியை உடனடுத்து வருகின்ற பந்தியில் பின்வருமாறு உட்புகுத்துவதன் மூலம் திருத்தப்பட்டுள்ளது. சந்தேகத்தினை நீக்கும் வகையில் தேர்தலொன்றை நடத்துவதற்கான உத்தரவினை அல்லது மக்கள் தீர்ப்பு ஒன்றினை நடத்துவதற்கான உத்தரவினை விடுக்கும் திகதியிலிருந்து ஆணைக்குழுவினால் வழங்கப்படும் நெறிப்படுத்தல்களானது பின்வருமாறு அமையலாம்.

1. எந்தத் தேர்தலோ அந்தத் தேர்தலுக்கு ஏற்ப தேர்தலை நடத்துவதுடன் அல்லது மக்கள் தீர்ப்பை நடத்துவதுடன் நேரடியாகத் தொடர்புபட்ட கடமைகளுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

2. ஏதேனும் வகையில் நேரடியாகப் பகிரங்க சேவை பணிகளுடன் அல்லது அரசியலமைப்பின்படி நியமிக்கப்பட்ட, என்ன நோக்கத்திற்காக ஆணைக்குழு நியமிக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்கு ஏற்ப, பகிரங்க சேவை ஆணைக்குழு அல்லது நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் நிர்வாக வீச்சு எல்லைக்குட்படும் ஏதேனும் பணிகளுடன் நேரடியாகத் தொடர்புபட்டு நெறிப்படுத்தல்களை வழங்குதலாகாது.

பதினேழாவது அரசியலமைப்புத் திருத்தம் அரச அதிகாரிகள் உட்பட அரசியல் கட்சிகளினால் அரச சொத்துக்கள் தேர்தல் காலங்களில் தவறாகப் பயன்படுத் தப்படுவதை தடுக்கும் அதுகாரத்தினை தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கியிருந்தது. பதினெட்டாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் உறுப்புரை 104(B) (4)(A) தேர்தல் ஆணைக்குழுவிற்கு இதுவரை இருந்து வந்த அதிகார வரம்பெல்லையினை பாரியளவில் குறைத்ததனால் தேர்தல் ஆணைக்குழு அதிகாரம் குறைக்கப்பட்ட திணைக்களமாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அரசியல் கட்சிகள் அரச சொத்துக்களை தேர்தல்காலப் பிரசாரங்களுக்குப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கிருந்த அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளது. எந்தத் தேர்தலோ அந்தத் தேர்தலுக்குரித்தான எல்லைக்குள்ளிருக்கும் அசையும் அசையாச் சொத்துக்களை அரசியல் கட்சிகள் பயன்படுத்த முடியாதெனக் கருத்துக் கொள்ள முடியும். அவ்வாறாயின் ஏனைய அசையும் அசையாச் சொத்துக்களை அரசியல் கட்சிகள் பயன்படுத்தக்கூடிய அபாயம் உள்ளது எனலாம்.

நேரடியாகத் தேர்தலுடன் தொடர்புபடாத வகையில் அரசாங்கத்தின் செயற்பாடுகளைத் தடுப்பதற்கான தேர்தல் ஆணையாளரின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் தேர்தல் காலங்களில் பொலிஸ் உட்பட பகிரங்க சேவையினை நெறிப்படுத்த தேர்தல் ஆணையாளருக்கு இருந்த அதிகாரம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தேர்தல் காலங்களில் பகிரங்க சேவை தொடர்பாக அரசிற்கு இருந்த யாப்பு ரீதியான கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டுள்ளன. இதனால் அரச சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தவும் அரச நியமனங்கள், பதவியுயர்வுகள், மாற்றங்களைத் தேர்தல் காலங்களில் நடுநிலையற்றுச் செயற்படுத்த சந்தர்ப்பங்கள் உள்ளது.

பதினேழாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் (5) ஆம் பந்தியில் அதன் (B) (C) (D) ஆகிய உப பந்திகள் வெகுஜனத் தொடர்பு சாதனங்களுக்குத் தேர்தல் ஆணையாளர் வழங்கும் நெறிப்படுத்தல்கள் தொடர்பாகக் கூறுகின்றது. பதினெட்டாவது அரசியலமைப்புத் திருத்தமானது பதினேழாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் (5) ஆம் பந்தியில் அதன் (B) (C) (D) பகுதிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய பந்தி (B) யினை அரசியல் யாப்பில் சேர்த்துள்ளது. புதிய பந்தியின்படி எந்தத் தேர்தலோ அந்தத் தேர்தலுக்கேற்ப வெகுஜனத் தொடர்பு சாதனங்களுக்கு பந்தி (A) யின் கீழ் வழங்கப்பட்ட எவையேனும் நெறிப்படுத்தல் ஒழுங்குமுறைக்கு ஏற்ப இணங்கி நடப்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் ஒலிபரப்பு, ஒளிபரப்பு செயற்படுத்துநர்கள் அல்லது செய்திப்பத்திரிகைகளின் உரிமையாளர்கள் அல்லது வெளியீட்டாளர்கள் எடுத்தல் அவர்களின் கடமையாகும்.

ஆரம்ப காலத்தில் அரச வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கும் நெறிப்படுத்தல்களுக்கும் கட்டுப்பட்டு செயற்பட்டு வந்தன. அரச ஊடகங்கள் நடுநிலையில்லாது தேர்தல் தொடர்பாகச் செயற்பட்டால் அந்நிறுவனங்களுக்கு தகுதி வாய்ந்த அதிகாரியை நியமிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு இருந்தது. இப்போது இவ்வதிகாரம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. அதாவது தேர்தல் காலங்களில் அரச கட்டுப்பாட்டிலான தொடர்பு சாதனங்களுக்கு தேர்தல் ஆணையாளர் செய்திகளை வழங்கலாம். ஆனால் அவற்றை அவை வெளியிடாது விட்டால் தேர்தல் ஆணைக்குழுவினால் எதுவும் செய்யமுடியாது. இது தேர்தல் காலங்களிற்கு முன்னரும் பின்னரும் தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து பெறக்கூடிய சுதந்திரமான தகவல் பரிமாற்றங்களைத் தடை செய்வதுடன் நல்லாட்சிப்பண்புகளையும் அழித்து விடுகின்றது. (நன்றி- டாக்டர் தனபாலசிங்கம் கிறிஷ்ணமோகன், அரசியல் விஞ்ஞானம், கிழக்குப் பல்கலைக் கழகம்)

இவ்வாறு 18ஆம் சீர்திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரத்தை மேலும் வலுவடையச் செய்தது. 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தாம் பதவிக்கு வந்தால், 100 நாட்களுக்குள் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாகவும், சர்ச்சைக்குரிய 18ஆம் திருத்த சட்டமூலத்தைத் திரும்பப் பெறப்போவதாகவும், வாக்குறுதி அளித்தார். அவர் தேர்தலில் வெற்றி பெற்றதால் 18 ஆம் திருத்தம்' இல்லாதொழிக்கப்பட்டு 19ஆம் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

### அரசியலமைப்பின் 19ஆம் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டதன் நோக்கம்

நிர்வாகத்துறை (ஜனாதிபதி), சட்டத்துறை (பாராளுமன்றம்) மற்றும் நீதித்துறை (உயர் நீதிமன்றம்) தனித்தனியாக செயற்பட வேண்டும் என்பது அதிகார பிரிவினை கொள்கை என்று சொல்லப்படுகிறது. ஆனால் இலங்கையில் இருந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஏனைய நிறுவனங்களான சட்டத்துறையையும், நீதித்துறையையும் தன் கீழ் வைத்திருக்க முனைந்தது. நிறைவேற்று அதிகாரம், அரசியல் யாப்பு அதிகாரம், நீதித்துறை ஆகியவற்றில் இருக்க வேண்டிய சமநிலையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இலங்கை அரசியல் அமைப்பின் 19 ஆம் திருத்தம் கொண்டுவரப்பட்டது. 19 ஆம் திருத்தத்தின் மூலம் நீதித்துறை தனியாகவும் சுதந்திரமாகவும் செயற்பட வழி செய்யப்பட்டிருப்பதாக கருதப்படுகிறது.

### 19ஆவது திருத்தச் சட்டத்தின் முக்கிய குறிக்கோள் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியது.

2015 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பொது எதிர்க்கட்சி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தான் வெற்றி பெறும் பட்சத்தில் தனது தேர்தல் பரப்புரையில் அரசமைப்பில் திருத்தங்கள் கொண்டுவருவதாக வாக்குறுதி அளித்திருந்தார். மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது நிறைவேற்றப்பட்ட 18ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் ஜனாதிபதிக்கு முழுமையான அதிகாரங்கள் வழங்கும் சட்டங்களை இதன்மூலம் திரும்பப் பெறப்படுவதனால் நாட்டில் மக்களாட்சியை மீண்டும் கொண்டு வருவதே இத்திருத்தச் சட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

19 ஆம் திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டமையினால் கிடைக்கும் நன்மைகள் குறித்து முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிக்கை வெளியிட்டது. அதில் கூறப்பட்டிருந்ததாவது, "அனைத்து இலங்கையருக்கும் அரச நிறுவனங்களில் குடியுரிமையை நடைமுன்றப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் ஊடாக தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. நீதித்துறையை எடுத்துக் கொள்வோம். உங்களுக்குத் தெரியும். சட்டத்தின் ஆட்சி மிக மோசமாக காயப்படுத்தப்பட்டது. நீதித்துறையில் மக்களுக்கு நம்பிக்கை இருந்ததா? இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணையம், உச்ச நீதிமன்றம் மற்றும் அமைப்புகளுக்கு அதிகாரத்தில் இருந்தவர்கள் தொலைபேசி அழைப்பு விடுத்தார்கள். அந்தக் காலத்தில் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள் எப்படி சுதந்திரமாகத் திரிந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். வழக்குகளில் எப்படித் தீர்ப்புகள் வழங்கப்பட்டன என்பது உங்களுக்குத் தெரியும்.

(தொடரும்....)

# 5 நாட்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொடர்பான பி.சி.ஆர்.சோதனை!

(கொழும்பு)

நாடு முழுவதுமுள்ள தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களில் கடந்த 5 நாட்களில் 1,065 பேர் பி.சி.ஆர்.( PCR) சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர்களில் 63 பேரின் பி.சி.ஆர். சோதனை முடிவுகள் விரைவில் கிடைக்கப் பெறும் எனக் கூறிய அவர், அந்த முடிவுகளில் கொரோனா தொற்றுக்குள்ளாகவில்லை என உறுதிப்படுத்தப்பட்ட நபர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படுவது ஆய்வறிவு சார்ந்த அடிப்படையில் மாத்திரமேயாகும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பல்வேறு பிரதேச மக்கள் மற்றும் மக்கள் குழுக்களால் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ளுமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்படுவது தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க விடயங்களைத் தெளிவுபடுத்தினார்.

கோரிக்கைகள் முன்வைப்பதையடுத்து மேற்கொள்ளப்படும் பரிசோதனை இதுவல்ல என்றும் விஞ்ஞான விடயங்களின் அடிப்படையில் சுகாதாரப் பிரிவினால் தீர்மானிக்கப்படும் பரிசோதனையாகும் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெளிவுபடுத்தினார்.

ஆய்வறிவு சார்ந்த விடயங்களின் அடிப்படையிலான தீர்மானங்களின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்படும் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக 5 அல்லது 6 மணித்தியாலங்கள் இதற்காகத் தேவைப்படும்.

இதுவரையில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டமை விழிப்பு நிலை தொடர்பாக கவனத்தில் கொண்டு தெரிவுசெய்யப்பட்டவர்கள் மற்றும் நோய் அச்சுறுத்தல் தொடர்பாக சந்தேகத்திற்குரிய குழுக்களுக்காகவேயாகும் என்றும் வைத்தியர் அனில் ஜாசிங்க கூறினார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நோய்க்கான அறிகுறிகள் காணப்படுவோர், தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் உள்ள நபர்கள் மற்றும் நோய்த் தொற்று காணப்படுவதாக சந்தேகத்திற்குரிய பெரும்பாலான நபர்களுக்காகவே இதுவரையில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கொவிட் - 19 தாக்கமற்றவர்கள் எனச் சான்றிதழ் வழங்குமாறு சில நபர்கள் கோருவதாக தகவல் வெளியாகியது. இவ்வாறான எந்தச் சந்தர்ப்பங்களிலும் கூட நோய் அறிகுறிகள் கொண்ட அல்லது இல்லாதவர்கள் என்று மாத்திரமே தெரிவிக்க முடியும்.

பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவேண்டிய நபர்கள் யார் என்பது குறித்து சுகாதாரப் பிரிவு மற்றும் உரிய அதிகாரிகளே தீர்மானிப்பார்கள் என்பதுடன் இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பொதுமக்களால் கோரிக்கை முன்வைக்கப்படுவது அவசியமற்றது.

இதுவரையில் நாடு முழுவதிலும் 13 ஆய்வுகூடங்களில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. நேற்று முன்தினம் முதல் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும் இந்தப் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டது.



இந்த அனைத்து பரிசோதனைகள் வைரஸ் நோய் தொடர்பான விசேட வைத்தியர்கள், நிபுணர்கள், மைக்ரோ, உயிரியல் வல்லுநர்கள் மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் உள்ளிட்ட மருத்துவ ஊழியர்கள் பங்களிப்புடனேயே மேற்கொள்ளப்படுகின்றது.

பரிசோதனை பன்முகப்படுத்தப்பட்ட போதிலும் இந்த அனைத்து பரிசோதனை நடவடிக்கைகளின் பரிசோதனை செயற்பாடுகள் உரிய நிர்ணயத்திற்கு அமைவாக சரியான அளவுகோல்களின்படி துல்லியமாக உறுதி செய்யப்பட்டது.

2020.04.16 மாத்திரம் சுகாதார அமைச்சால், பி.சி.ஆர். பரிசோதனைகள் சுமார் 500 இற்கும் மேற்பட்டவை மேற்கொள்ளப்பட்டன. இதில் எந்தவொரு நோய்த்தொற்றுக்கு உள்ளானவர்கள் குறித்த தகவல்கள் பதிவாகவில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க மேலும் சுட்டிக்காட்டினார். (இ)

# சுகாதாரப் பாதுகாப்புமிக்க ஆடைகள் கையளிப்பு

இலங்கையின் நடுத்தர மற்றும் சிறிய ஆடை உற்பத்தியா ளர்கள் சங்கத்தினால் சுகாதாரப் பாதுகாப்புமிக்க ஆடைகள் தொகுதியொன்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த சுகாதாரப் பாதுகாப்புமிக்க ஆடைகள் வைத்தியசாலைச் சேவைகள் சபையின் பணிப்பாளர் சங்கைக்குரிய ரஜவெல்ல சுபுதி தேரரின் ஆலோசனைப்படி கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் இலங்கை நடுத்தர மற்றும் சிறிய ஆடைகள் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் பந்துல பிரணாந்து உள்ளிட்ட குழுவினரும் கலந்துக்கொண்டனர். (இ)

# அதிகரிக்கும் திருட்டுக்கள்

(துன்னாலை)

துன்னாலை தெற்கு பிள்ளையார் கோயிலடியில் உள்ள ஒருவருடைய வீட்டில் வளவுக்குள் கிணற்றில் பூட்டி வைக்கப்பட்ட மோட்டார் கடந்த 15 ஆம் திகதி களவு போயுள்ளது.

வீட்டு உரிமையாளர் 16ஆம் தேதி நெல்லியடி பொலிஸில் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

முறைப்பாட்டிற்கமைய நெல்லியடிப் பொலிஸாரால் மோட்டார் எடுத்த இரண்டு பேர் மோட்டார் உடன் கைது செய்யப் பட்டனர் அவர்களை தீவிர விசாரணைக் குட்படுத்தியபோது இன்னும் ஒருவர் தங்களுடன் சேர்ந்து எடுத்ததாக கூறியிருந்தனர் அவரையும் தற்போது பொலிஸார் தேடி வருகின்றனர்.

வீட்டு உரிமையாளரை அழைத்து மோட்டரை காட்டிய போது அவர் தன்னுடைய மோட்டார் என அடையாளப்படுத்தினார்.

மேலும் 17 ஆம் திகதி வெள்ளியம் தோட்டம் துன்னாலை கிழக்கு கரவெட்டிப் பகுதியில் கால்நடை வளர்க்கும் ஒருவருடைய 3 மாடுகள் 5 கோழிகள் பட்டப்பகலில் களவு போயுள்ளது.

குறித்த நபர் 18 ஆம் திகதி காலை நெல்லியடிப் பொலிஸில் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்தார் தொடர்ச்சியாக அப்பகுதியில் களவுகள் போய் வருவதாகவும் நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்தார் இதனையடுத்து நெல்லியடி பொலிஸார் அப்பகுதியை தீவிர விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். (இ-60)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கோபம்

எனக்கு அடிக்கடி கோபம் வருகிறது. அதற்கு என்ன அர்த்தம் என்றார் ஒருத்தர்.

உங்களுக்கு அடிக்கடி பைத்தியம் பிடிக்குது என்று விளக்கம் கொடுத்தார் இன்னொருத்தர்.

ஏனென்றால் கோபம் என்பது ஒரு தற்காலிக பைத்தியம் தான் என்கிறார் ஒரு பெரியவர்.

தற்காலிகமாக ஒருத்தருக்கு பிடிக்கிற பைத்தியம் தான் கோபம். அந்தச் சமயத்தில் அவர் மறைத்து வைத்திருக்கும் பைத்தியக்காரத்தனம் வெடித்துக்கொண்டு வெளியில் வருகிறது அவ்வளவுதான்.

இது மனிதனை சுருக்கும்– சக்திகளைக் குறைக்கும் என்கிறார் அந்தப் பெரியவர்.

அவர் சொல்வதைப் பார்த்தால் நாம் எல்லோருமே தினமும் சிறிது நேரம் பைத்தியமாகி அப்புறம் சகஜமாகிவிடுகிறோம் என்பது புரிகிறது.

இப்பொழுது நாம் ஏதோ ஒரு விடயத்துக்காக ஒருவரிடம் கோபப்படுகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். சிறிது நேரத்தில் சகஜநிலைக்குத் திரும்பிவிடுகிறோம். அப்பொழுது சில பேர் உண்மை நிலையை பின்னுக்குத் தள்ளிவிட்டு மன்னிப்புக் கேட்கிற பழக்கம் உண்டு.

நான் கோபப்பட்டுவிட்டேன் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் என்று ஒருத்தர் சொல்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் மனதுக்குள் நுழைந்து அங்கே என்ன நடக்கிறது. அவர் ஏன் மன்னிப்பு கேட்கிறார் என்று ஆராய்ந்து பார்த்தால் தெரியவரும் விடயம் என்ன தெரியுமா?

அவர் அப்படி மன்னிப்புக் கேட்பது வெறும் நடிப்பு என்று தெரியவருகிறது. அவரைப் பற்றி நாம் மட்டமாக நினைத்து விடுவோமாம். அவர் மேன்மையானவர் என்பதை நம்மிடம் காட்டிக் கொள்வதற்காகவே அவர் அப்படிச் செய்தார்.

நாமும் அப்படித்தான். நாம் யார் மேலாவது கோபப்பட்டுவிட்டு சிறிது நேரம் கழித்து அவரிடமே மன்னிப்புக் கேட்கிறோம் என்றால் என்ன அர்த்தம்.

அந்த ஆள் நம்மை ஒரு குரங்கு என்று நினைத்துவிடக்கூடாது என்று நம் மனது நினைக்கிறது. அதன் வெளிப்பாடுதான் மன்னிப்புக் கேட்பது.

சரி கோபத்தை வெல்வதற்கு ஏதாவது வழி உண்டா? என்று கேட்டால் அதற்கும் அந்தப் பெரியவர் வழி சொல்கிறார்.

மனதைப் பற்றிய சில உண்மைகளைப் புரிந்து கொண்டால் கோபத்தை வென்றுவிடலாம் என்கிறார் அவர். உங்களது மனம் ஒருமுனைப்பட்டது. அதாவது ஒரு சமயத்தில் இரண்டு விடயங்களைப் பற்றி அதனால் நினைக்க முடியாது.

ஒரு எண்ணத்தில் இருந்து இன்னொரு எண்ணத்திற்கு வேகமாக மாறக்கூடிய சக்தி மனதுக்கு உண்டு.

ஆனால் ஒரு சமயத்தில் ஒரு எண்ணத்தைத்தான் மனதால் நினைக்க முடியும். கோபம் வரும்பொழுது நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள். ஐந்து தடவை உங்கள் மூச்சை ஆழமாக உள்ளே இழுத்து மெதுவாக மெல்ல வெளியில் விடுங்கள். அப்பொழுது என்ன நடக்கும் என்றால் மனதில் கோபத்திற்குப் பதிலாக சுவாசம் பற்றிய சிந்தனை ஏறும்.

இந்த சுவாசத்திற்கு பின்பு மறுபடியும் கோபம் மனதில் தோன்றினால் கூட அது தீவிரமாக இருக்காது. அது தீவிரமான கணம் கடந்து போயிற்று. அதனாலே பழைய அளவுக்கு கோபம் இருக்காது!

இதுபோன்று மனதில் கோபத்தை நோக்கி பாய்கின்ற சக்தியைத் திருப்பி விட்டுவிட்டால் கோபத்தை இன்னொருவர் மேலே பிரயோகிக்க வேண்டிய அவசியம் இருக்காது!

இதைத்தொடர்ந்து செய்துகொண்டு வந்தால் கோபம் யார் மீதும் வராத அளவுக்கு அது ஒரு பழக்கமாக ஆகிவிடும்!

இதுதான் அந்தப் பெரியவர் சொல்கின்ற வழி!

இந்த வழியை ஒரு குடும்பத் தலைவரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். அவர் சொன்னார் ஒவ்வொருவர் ஒவ்வொரு விதத்திலே கோபத்தை சமாளிக்கிறார்கள் சேர்... நான் எனக்கென்று ஒரு வழி வைத்திருக்கின்றேன்! என்றார்.

அது எப்படி? என்றேன் ஆச்சரியமாக!என் மனைவிக்கு திடீர் திடீரென்று பயங்கரமாகக் கோபம் வந்துவிடும் சேர்... கோபம் வந்துவிட்டால் கையில் கிடைக்கின்ற பாத்திரத்தை எல்லாம் என் முகத்திற்கு நேராக வீசுவதுண்டு சேர் என்றார். அதை எப்படிச் சமாளிக்கின்றீர்கள்? என்று கேட்டேன்.

அது ஒன்றும் கஷ்டமில்லை சேர். ஒரு தலையணையை எடுத்து என் முகத்திற்கு நேராக பிடித்துக்கொள்வேன்... அவ்வளவுதான்! அப்படி என்றார்.

# காய்ச்சல், இருமல் நோய் அறிகுறி உள்ளோர் புகையிரத சேவையைப் பயன்படுத்த வேண்டாம்

## புகையிரதத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

அலுவலகப் புகையிரதங்களில் பயணிக்கும் பயணிகள் பயணச்சீட்டை பெறும் போது ஒரு மீற்றர் இடைவெளியில் இருக்க வேண்டும். அத்துடன் காய்ச்சல், இருமல் உள்ளிட்ட நோய் அறிகுறிகள் உள்ளவர்கள் புகையிரத சேவையைப் பயன்படுத்த வேண்டாம் எனப் புகையிரத திணைக்களம் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்தது.

இது தொடர்பில் புகையிரதத்திணைக்கள பொது முகாமையாளர் டிலந்த பிரனாந்து தெரிவிக்கையில்,

புகையிரத சேவைகள் பாதுகாப்பான முறையில் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. பயணச்சீட்டு விநியோகிப்பது தொடக்கம் புகையிரத நிலைய சாதாரண செயற்பாடுகளுக்காகவும் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

புகையிரதத்தின் ஒரு பெட்டியில் 50 பேர் மாத்திரமே பாதுகாப்பான முறையில் பயணிக்க முடியும்.

பயணிகள் புகையிரத நிலையத்துக்குள் உள்வரும் போதும், புகையிரதத்தில் பயணிக்கும் போதும் முகக்கவசங்களை கட்டாயம் அணிய வேண்டும்.

அத்துடன் புகையிரத நிலையத்திற்குள் எச்சில் துப்புவதும் தேவையற்ற விதத்தில் நடமாடுவதும் தடை செய்யப்பட்டது.

வகுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்கத்தால் அத்தியாவசிய சேவையாக அடையாளப்படுத்தப்பட்ட அரச மற்றும் தனியார் துறையினர் மாத்திரம் அலுவலகப் புகையிரதங்களில் பயணம் செய்ய முடியும்.

எனினும் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலுள்ள சாதாரண மக்கள் அலுவலகப் புகையிரதங்களில் பயணிப்பது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# எமது வளங்களைப் பயன்படுத்தி வளமான எதிர்காலத்தை அமைப்போம்

## சிவசக்தி ஆனந்தன் அழைப்பு

(வவுனியா)

தாயகத்தில் தனித்துவமாக உள்ள வளங்களைப் பயன்படுத்தி எமக்கான வளமான எதிர்காலத்தை அமைத்துக்கொள்வதற்கு அனைத்துத் தரப்பினரும் பேதமின்றி திடசங்கற்பம் பூணவேண்டும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்தார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக அவர் விடுத்த ஊடக அறிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அவ்வறிக்கையில் மேலும்,

கொரோனா வைரஸ் பரவலின் தாக்கம் உலகளாவிய ரீதியில் தீவிரமாகியுள்ள நிலையில் அதன் பாதிப்புக்கள் இலங்கையிலும் ஏற்பட்டுள்ளது.

ஏனைய உலக நாடுகளுடன ஒப்பிடுகையில் கொரோனா தொற்றாளர்களும், மரணங்களும் இலங்கையில் குறைவாக இருந்தாலும் அதனால் நாட்டின் ஒட்டுமொத்தமான நிலைமையும் தலைகீழாக மாறியுள்ளது.

சுகாதாரப் பிரிவினரின் தகவல்களின் பிரகாரம் எதிர்வரும் நாட்களில் நாட்டில் ஓரளவு நிலைமைகள் வழமைக்கு திரும்பினாலும், அன்றாட வாழ்வாதாரத்தினை நகர்த்திச் செல்வதில் பெரும் நெருக்கடியான நிலைமைகள ஏற்படப்போகின்றமையை தவிர்க்க முடியாதவொரு சூழல் எழுந்துள்ளது.

போரின் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் எமது மக்களை மாறிமாறி ஆட்சிப்பீடத்தில் இருந்த அரசுகள் மாற்றான் தாய் மனப்பான்மையுடனேயே நடத்தி வந்திருந்தன என்பதே வெளிப்படையான விடயமாகின்றது.

எமது மக்களுக்கான நலத்திட்டங்கள் அனைத்துமே கண்துடைப்பான நாடகங்களாகவே இருக்கையில் எமது மக்கள் தமது சொந்த முயற்சியில் வாழ்வியலில் மீண்டெழ ஆரம்பித்திருந்தனர்.

அவ்வாறான நிலையில் உலகளாவியதொற்றுநோயான கொரோனா மீண்டெழ ஆரம்பித்திருந்த எமது மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கையையும் புரட்டிப் போட்டுள்ளது.

திறந்த பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் அரசாங்கம் பின்பற்றிய இறக்குமதிகளை மட்டுமே மையப்படுத்திய பொருளாதாரத்தினால் தற்போது பெரும் நெருக்கடிகள் எழுந்துள்ளதோடு சவால்கள் நிறைந்த எதிர்காலமொன்றுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தாயக பூமி, காடுகளையும், களனிகளையும், நீர்நிலைகள் உள்ளிட்ட வளங்கள் நிறைந்தவையாக இருக்கின்றன.

இதனை நாம் அனைவரும் முதலில் மனதில் திடமாக நிறுத்திக் கொள்வதோடு உடனடியாக எமது வளங்களை மையப்படுத்தி எதிர்காலத்தினை திட்டமிட வேண்டிய கடப்பாட்டிற்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

குறிப்பாக எமது பிரதேசத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக "சுயதேவை பொருளாதார" கொள்கைகளை மையப்படுத்திய திட்டங்களை உடன பின்பற்றுவதே எமக்கும் எதிர்காலச் சந்ததியினரினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதாக இருக்கும்.

விசேடமாக, நெல் உற்பத்தி, மரக்கறி உற்பத்தி, நன்னீர், கடல் நீர் மீன்பிடி ஆகியவற்றை ஊக்குவிப்பது இன்றியமையாததாகின்றது.

அதுமட்டுமன்றி, அனைத்து தரப்பினரும் தமது வீடுகளில் வீட்டுத்தோட்டங்களை முன்னெடுப்பதும் அவசியமானதொரு செயற்பாடாகின்றது.

ஆகவே எமது மண்ணில உள்ள வளங்களை சரியாக புரிந்து முறையாக பகிர்ந்து செயற்படுவதன் ஊடாக நாம் ஆட்சியாளர்களிடமோ, பிற தரப்பினர்களிடமோ தங்கி வாழும் சூழலிலிருந்து முற்றாக விடுபடுவதற்கான வழியை ஏற்படுத்துகின்றது.

கொரோனாவினால் ஏற்பட்டுள்ள சவால்களுக்கு முகம்கொடுக்கும் முகமாகவும் எமது எதிர்காலத்தினை நாமே வளமானதாக வகுத்துக் கொள்வதற்காகவும் தற்போதே தீர்க்கமாக முடிவெடுத்து நடைமுறைச்சாத்தியமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது கட்டாயமாகின்றது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

மனதில் ஆசை இருந்தால் மட்டும் போதாது. அதை அடைவதற்கான தகுதியும் முயற்சியும் இருந்தால் மட்டுமே எண்ணியதைப் பெற முடியும்.

- விதுரர்

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மன உறுதி



ஏன் நாம் இயற்கையை உணர்ந்து கொள்ளவும், வாழ்க்கையின் உண்மையை உணர்ந்து கொள்ளவும் முடியாமல் தடுமாறுகிறோம்? ஏன் அமைதியான, சீரான வாழ்வைப் பெற முடியாமல் அல்லலுறுகிறோம்? ஏன் இந்த நிலை என ஆய்ந்து பார்க்க வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன், நீங்கள் ஒரு பையை எடுத்துக் கொண்டு நல்ல காய்கறி வாங்குவதற்காகக் கடைத் தெருவுக்கு புறப்பட்டுப் போகிறீர்கள். போகும் வழியில் விதவிதமாக பூக்களும், பழங்களும் உங்கள் கண்ணில் படுகின்றன, அவற்றை வாங்கிப் பையை நிரப்பிக் கொள்கிறீர்கள்.

பின்னர் கடைத்தெருவுக்குப் போய்க் காய்கறி வாங்கிய பிறகு பார்த்தால், அவற்றை வைக்கப் பையில் இடமில்லை. பையில்தான் ஏற்கனவே நிரப்பி விட்டீர்களே! இப்போது உங்கள் பிரச்சினை என்ன? ஏற்கனவே பையில் உள்ளவற்றை வெளியே கொட்டிவிட்டு, எதை வாங்குவதற்காக கடைத் தெருவுக்கு வந்தீர்களோ, அந்தக் காய்கறியை வாங்கிப் போட்டுக் கொள்வதா? அல்லது, காய்கறியே வாங்காமல் ஏற்கனவே வழியில் வரும்போது பையில் நிரப்பிக் கொண்டு வந்தவற்றுடன் வீடு திரும்புவதா? கடைத் தெருவுக்குப் புறப்படும் பொழுதே காய்கறி தான் வாங்கிக் கொண்டு திரும்ப வேண்டும் என்ற உறுதி வேண்டும்.

ஒவ்வொரு வகையிலும் அத்தகைய மன உறுதியைப் பெற்று இறைநிலை உணர்ந்து, உண்மை நெறியில் அறிவறிந்து வாழ்வது தான் தவம் (Yoga).

உன் மனச்சாட்சியே, உலகத்தைப் பார்க்கிற பெரியதும் உண்மையானதுமான நீதிபதி.

~ மெக்கலின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# கொரோனா அச்சம் இன்னமும் அகலவில்லை

வாசகப் பெருமக்களுக்கு அன்பு வணக்கம்.

2020 மார்ச் 20ஆம் திகதி அமுலாகிய ஊரடங்குச் சட்டம் காரணமாக மறுநாள் 21ஆம் திகதியிலிருந்து வலம்புரி நாளிதழை அச்சிட முடியவில்லை.

உலகம் முழுவதையும் உலுப்பி நிற்கின்ற கொரோனாத் தொற்று இலங்கையிலும் ஏற்பட்டதன் காரணமாக, கடந்த ஒரு மாத காலமாக ஊரடங்கு அமுலாக்கப்பட்டது.

இன்று ஏப்ரல் 20ஆம் திகதியிலிருந்து வடமாகாணம் உள்ளிட்ட 18 மாவட்டங்களில் ஊரடங்கு தளர்த்தப்படுகிறது.

ஊரடங்கு அமுலில் இருந்த காலத்தில் மின்னியல் ஊடாக வலம்புரி நாளிதழ் உங்களை வந்தடைந்திருந்தது.

எனினும் மின்னியல் ஊடாக வலம்புரி நாளிதழை நீங்கள் அனைவரும் வாசிப்பதென்பது சாத்தியமாகி இருக்காது என்பதை எம்மால் உணர முடிகிறது.

அதேநேரம் அச்சு நாளிதழாக வாசிப்பதில் இருக்கின்ற திருப்தி என்பது வித்தியாசமானது.

அந்த வகையில் மீண்டும் வலம்புரி உங்கள் கரங்களில் வந்தடைவதற்கு வழிதந்த இறை பரம்பொருளுக்கு நன்றி கூறிக் கொள்கின்றோம்.

மேலும் உலகை உலுக்கி நிற்கின்ற கொரோனாத் தொற்று முழுமையாக இல்லாதுபோய் மக்கள் சமூகம் நிம்மதியாக வாழ நாம் அனைவரும் கூட்டாக இறைவனிடம் வேண்டுதல் செய்வோம்.

இதற்கு மேலாக புலம்பெயர் நாடுகளில் எங்கள் உறவுகள் சிலர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்த சம்பவங்கள் எங்கள் இதயங்களைச் சுட்டெரிக்கின்றன.

இங்கு வாழ முடியாத சூழ்நிலையில் வெளிநாடுகளுக்குச் சென்று அங்காவது நிம்மதியாக வாழலாம் என்றால், அங்கும் கொடிய கொரோனா எங்கள் உறவுகளைப் பதம் பார்க்கிறது எனும் போது அந்தத் துன்பத்தை எங்ஙனம் தாங்க முடியும்.

ஆக, அன்புக்குரிய பெருமக்களே! இந்த உலகம் இறைவனின் படைப்பு. அவன் இன்றி அணுவும் அசையாது என்பது நம் முன்னோர்கள் கண்ட முடிவு.

ஆகையால் கொரோனாத் தொற்றில் இருந்து மக்கள் சமூகத்தைக் காப்பாற்ற நாம் அனைவரும் சதா இறைவனைப் பிரார்த்திப்போமாக.

தவிர, கொரோனாத் தொற்றில் இருந்து மக்களைக் பாதுகாப்பதற்காக அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு மக்களுக்குப் பல வழிகளிலும் அசௌகரியத்தை ஏற்படுத்தியிருந்தாலும் அதைவிட்ட வழி வேறு இல்லை என்ற வகையில் ஊரடங்கை அமுல்படுத்துவது தவிர்க்க முடியாததாயிற்று.

இன்று ஊரடங்கு தளர்த்தப்படுகின்ற தென்பதற்காக, கொரோனா அச்சம் நீங்கி விட்டது என்று யாரும் நினைத்து விடக்கூடாது.

ஆகையால் ஊரடங்கு தளர்த்தப்பட்டது என்பதற்காக அனைவரும் முண்டியடித்து ஒரு நெருக்கடியான சூழமைவை ஏற்படுத்தாமல், கொரோனாத் தொற்றில் இருந்து நம்மைப் பாதுகாக்கக்கூடிய அத்தனை நடைமுறைகளையும் நாம் தொடர்ந்து பின்பற்றுவதில் மிகுந்த கருசனை காட்ட வேண்டும்.

இவ்வாறு காட்டப்படும் கருசனை எமதும் எம் சமூகத்தினதும் உயிரைக் காப்பாற்றும்.

# இன்னும் நம்பிக்கை இருக்கிறது



கொரோனா பொசிட்டிவ் குறைய வேண்டும் என்று எல்லாரும் காத்திருக்கிறார்கள். நாம் கொரோனாவினால் நடந்த சில பொசிட்டிவ் நிகழ்வுகளைத் தொகுத்தோம். அவற்றில் சில இவை!

● டெக்ஸாஸில் ராபர்ட்சன் ஆரம்பப் பள்ளி கொரோனாவுக்காக விடுமுறை விடப்பட்டுள்ளது. அந்தப் பள்ளியின் ஆசிரியைகள் சிலர் காரை எடுத்துக்கொண்டு அவர்களிடம் படிக்கும் மாணவர்கள் இருக்கும் வீதி வழியே ஹோர்ன் அடித்துக் கொண்டே சென்றிருக்கிறார்கள்.

வெளியில், ஜன்னலில் வந்து நின்ற மாணவ, மாணவியரிடம் கையசைத்து விமிஸ் யூ என்று கத்தியபடி சாலையில் சென்ற ஆசிரியர்களைப் பார்த்து பெற்றோருக்கும் செம நெகிழ்ச்சி!

● அமெரிக்க ஓட்டப்பந்தய வீராங்கனை ரெபேக்கா மெஹ்றா பகிர்ந்திருந்த சம்பவம் இது. சுப்பர் மார்க்கெட் பார்க்கிங்கில் ரொம்ப நேரம் வயதான தம்பதி நின்றுகொண்டிருந்ததைப் பார்த்து விசாரித்திருக்கிறார். 'மளிகைப் பொருள்கள் வாங்க வேண்டும்.


ஆனால் கூட்டத்தில் போவது எங்களைப் போல வயதானவர்களுக்கு நல்லதல்ல என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். எங்களால் வேறு பலருக்கும் சங்கடங்கள் இருக்கலாம். அதனால்தான்...' என்று இழுக்க, இவரே காசு வாங்கி, பொருள்களை வாங்கிக் கொடுத்து அனுப்பியிருக்கிறார். அவரது ஃபாலோயர்ஸும் 'இனி நாங்களும் இப்படி உதவிக்கரம் நீட்டுவோம்' என்று குறிப்பிட்டிருந்தது உதவிகள் நீள்வதை உறுதிப்படுத்தியிருந்தது.

● அமெரிக்கா மசாசுசெட்ஸில் உள்ள ஸ்டெர்லிங் வில்லேஜில் க்வாரன்டீனில் இருந்தார் மில்லி எரிக்சன். அவர் இருந்த சுற்றுவட்டாரம் முழுவதுமே தீவிரக் கண்காணிப்பில் இருந்தது.

அவருக்கு அன்று வயது 100. மகன் கேரி எரிக்சன் குடும்பத்தாருடன் சென்று ஜன்னலுக்கு வெளியிலிருந்தே ஹப்பி பர்த்டே பாடியிருக்கிறார்.

கையில் 'இன்று எனக்கு 100வது பிறந்தநாள்' என்ற அட்டையை ஏந்தியபடி ஆனந்தக் கண்ணீரோடு குடும்பத்தாருக்கு மில்லி கையசைத்த வீடியோ அங்கே வைரல்!

● ஒலிவியா, ரால் டி ஃப்ரெய்டாஸ் ஜோடிக்கு வாழ்வின் மறக்க முடியாத நாள்கள் இவை. மாலைதீவிலுள்ள ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்கு ஆறுநாள் தேனிலவுக்குத் திட்டமிட்டு வந்த இந்தத்









தென்னாப்பிரிக்க ஜோடி இப்போது அங்கே ஸ்பெஷல் விருந்தினர்கள்.

கொரோனாவால் விமான நிலையங்கள் மூடப்பட்டுவிட மற்ற விருந்தினர்கள் எல்லாரும் தனி விமானம், கப்பல் என்று போய்விட்டனர்.

இவர்களுக்கு விமானமும் கிடைக்கவில்லை. தனி விமானத்துக்கும் வழியில்லை. அரசு விதிப்படி ஹோட்டலில் விருந்தினர்கள் இருக்கும்போது மூட முடியாது என்பதால், ஹோட்டலின் அத்தனை ஊழியர்களும் இந்த இரு வருக்காக உணவு பரிமாறுவதும், இரவு கேண்டில் லைட் டின்னருக்கு ஏற்பாடு செய்வதும் என்று ஏக கவனிப்பு. அங்கிருக்கும் பீச், நீச்சல் குளம், பார், ரெஸ்டாரன்ட் என்று நாளொரு இடம் பொழுதொரு ஃபோட்டோ என்று கொண்டாடிக்கொண்டிருக்கிறது இந்த இளஞ்சோடி!

வழக்கமான நோயாளிகளுக்கு மருத்துவரின் இணக்கமான புன்னகையும் உடல்மொழியும் தருகிற நம்பிக்கைதான் நோய்க்கு முதல் மருந்து. கோவிட் பேஷன்ட்களுக்கு அந்த பாக்கியம் கிட்டுவதில்லை.

தலை முதல் கால் வரை விண்வெளி வீரர்கள் போலத் தெரியும் அவர்களால் சிகிச்சைகளுக்கு வருபவர்களைப் பார்த்து சிரிக்கக்கூட முடிவதில்லை. சாண்டியாகோவின் ஸ்கிரிப் மெர்சி மருத்துவமனை மருத்துவர்கள் அதற்கும் ஒரு ஐடியா செய்திருக்கிறார்கள்.


தங்கள் பெயர், துறை ஆகியவற்றோடு சிரித்தபடி தாங்கள் இருக்கும் புகைப்படத்தை கோவிட் ஸ்பெஷல் உடையில் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் ஒன்றிரண்டு பேர் இதைச்செய்து நோயாளிகளின் புன்னகையைப் பரிசாகப் பெற, எல்லாரும் இதைப் பின்பற்ற ஆரம்பித்துவிட்டார்கள்!

● கெண்டகி பல்கலைக்கழகத்தில் காதுகேளாருக்கான துறையில் படித்துக் கொண்டிருப்பவர் ஆஷ்லே லாரன்ஸ். ஒருவரின் உதட்டசைவைப் பார்த்துப் புரிந்துகொள்வதுதான் காது கேளாருக்கான கம்யூனிகேஷன்.

கொரோனாவால் எல்லாரும் மாஸ்குடன் வெளியில் திரியும்போது, காது கேளாதோர் சிரமப்படுவதை உணர்ந்த இவர் உதடுகளைச்சுற்றி மட்டும் டிரான்ஸ்பரன்ஸாகத் தெரியும் வண்ணம் மாஸ்க் ஒன்றை உருவாக்கி பேஸ்புக்கில் பதிவிட்டார்.

பலரும் பார்த்து இன்ஸ்பயராகிவிட, மருத்துவர்கள் உட்பட பொதுமக்களும் பாராட்ட அவரவர் தேவைக்கேற்ப உருவாக்கி எல்லாருக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

# 4 ஆயிரம் கிலோ பூசணிக்காயை விற்பனை செய்ய முடியாமல் தவிக்கும் ஏழை விவசாயி



(மன்னார்)

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மடுக்கரை கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட பூசணிக்காய் பயிர்ச் செய்கையினால் அதிக விளைச்சல் கிடைக்கப்பெற்றுள்ள போதும் பூசணிக்காயை விற்பனை செய்ய முடியாமல் ஏழை விவசாயி தவித்து வருகிறார்.

சுமார் 4 ஆயிரம் கிலோ பூசணிக்காயை குறித்த விவசாயி அறுவடை செய்துள்ளார். குறித்த விவசாயிக்கு பாடசாலை செல்லும் மூன்று பிள்ளைகள் உள்ளனர். தோட்டச் செய்கையை வாழ்வாதாரத் தொழிலாக செய்து வரும் இவர் ஏற்கனவே கடனைப் பெற்று பூசணி செய்கையை மேற்கொண்டுள்ளார்.

தனது தோட்டத்தில் விளைந்து அறுவடை செய்து வைத்துள்ள சுமார் 4 ஆயிரம் கிலோ பூசணிக்காயை விற்பனை செய்ய முடியாமல் தவித்து வருகின்றார். நாடு சீராக இருந்த போது ஒரு ஏக்கர் பரப்பளவில் பூசணிப் பயிர் செய்துள்ளார். நல்ல விளைச்சல் கிடைத்துள்ளது. அறுவடை செய்யும் நேரத்தில் கொரோனா வைரஸ் பிரச்சினையால் போக்குவரத்து தடைகள் ஏற்பட்டு தம்புள்ளை மரக்கறி சந்தை சீராக இயங்கவில்லை. இதனால் 4 ஆயிரம் கிலோ பூசணிக்காயை விற்பனை செய்ய முடியாமல் வீட்டில் உள்ள மூன்று அறைகளிலும் குவித்து வைக்கப்பட்டுள்ளன.

தற்போதைய கொரோனா ஊரடங்கால் வாழ்வாதாரத்திற்கு பெரிதும் கஷ்டப்பட வேண்டி உள்ளது என குறித்த விவசாயி தெரிவித்தார். தோட்டம் செய்வதற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை மீள செலுத்த வேண்டும். அரசாங்கம் மரக்கறி வகைகளை கொள்வனவு செய்வதாக அறிய முடிகின்றது. அது பற்றி எந்த முடிவும் இல்லை. எனவே அரச அதிகாரிகள் எம்மீது அக்கறை கொண்டு இவற்றை விற்பனை செய்து தருவதற்கு நடவடிக்கை எடுத்து விவசாயிகளை காப்பாற்ற முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மேலும் பூசணி தேவைப்படும் உள்ளூர் வியாபாரிகள் 077 237 8121 என்னும் இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு பூசணிக்காயை கொள்வனவு செய்து உதவிபுரியுமாறும் அவர் கேட்டு கொண்டார். (இ-285)

# கர்ப்பிணிக்கு கொரோனா

## மகப்பேற்று வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்பட்டது

(கொழும்பு)

பொரளை காசல் மகப்பேற்று வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கர்ப்பிணித் தாய் ஒருவருக்கு கொரோனா இருப்பது உறுதியானதை அடுத்து அந்த வைத்திய சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

கொழும்பு வாழைத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண் ஒருவர் காசல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கர்ப்பிணிப் பெண் தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலைக்கு (ஐ.டி.எச்) உடனடியாக மாற்றப்பட்டார். எனினும் காசல் மகப்பேற்று வைத்தியசாலையில் (காசல் வீதி மகளிர் வைத்தியசாலை (போதனா) கிருமித் தொற்று நீக்கி விசிறும் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளதால் அந்த வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (ம-3)

# பொதுப்போக்குவரத்து சேவைகள் இன்று முதல் கட்டுப்பாட்டுடன் ஆரம்பம்

(கொழும்பு)

இன்று முதல் பொதுப்போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. பேருந்துகள், புகையிரதங்கள் கிருமி நீக்கப்பட்டு, இன்று தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

5000 இ.போ.ச பேருந்துகள் மற்றும் 400 புகையிரத சேவைகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பேருந்துகளும் கிரமமாக கிருமிநீக்கம் செய்யப்பட்டுள்ளன.

ஒரு பேருந்தில் பயணிக்க கூடியவர்களின் அரைவாசி பங்கினரையே பேருந்தில் ஏற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

தனியார் துறையினரும் இன்று முதல் சேவையில் ஈடுபடுகிறார்கள். முதல் 40 நாட்களிற்கு ஒரு ஆசனத்தில் ஒரு பயணி மாத்திரமே உட்கார அனுமதிக்கப்படுவார் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

அலுவலக புகையிரத சேவைகளை இன்று முதல் மீண்டும் தொடங்க புகையிரத திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி, 50 பயணிகள் மட்டுமே ஒரு பெட்டியில் ஏற முடியும். புகையிரதங்களில் முகக்கவசம் அணிவது அவசியம். புகையிரத வளாகங்கள், புகையிரதத்தில் துப்புவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

புகையிர வண்டிகள் மற்றும் வளாகங்களில் அங்கீகரிக்கப்படாமல் விற்பனை நடவடிக்கையில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இருமல், காய்ச்சல், தடிமல் உள்ளவர்கள் புகையிரதங்களை பயன்படுத்த வேண்டாம் என்று பொது மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ம-3)

# சமூக இடைவெளியினைப் பின்பற்றி அன்றாட செயற்பாட்டை முன்னெடுக்குக

## யாழ் மாவட்ட அரசஅதிபர் மகேசன் பொதுமக்களிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படும் நேரங்களில் மக்கள் சமூக இடைவெளியினை பின்பற்றி தமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப் பிள்ளை மகேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், "யாழ்ப்பாணத்தில் இன்று ஊரடங்கு சட்டம் அதிகாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை தளர்த்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மிக நீண்ட நாட்களுக்கு பிற்பாடு இந்த ஊரடங்கு தளர்வு தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.



இந்த ஊரடங்கு தளர்வின் போது பொதுமக்கள் சுகாதார பிரிவினர் வழங்கியுள்ள அறிவுறுத்தல்களை கடைப்பிடித்து தங்களுடைய தனிமைப்படுத்தலையும், சமூக இடைவெளியினையும் பேணி அவர்கள் நடந்து கொள்வது மிக மிக அவசியமானது" எனக் குறிப் பிட்டுள்ளார்.

(ம-3)

### யாழ் மாவட்டத்...

டுள்ளதாவது,

யாழ்ப்பாண மாவட்டத்தில் குறுகிய அறிவிப்புடன் ஊரடங்கு உத்தரவு நீக்குதல் சம்பந்தமாக அனுப்பப்பட்ட கடிதத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு இன்று ஏப்ரல் 20 ஆம் திகதி காலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் நாங்கள் அவசர சந்திப்பு ஒன்றை இன்று (நேற்று ) நடத்தியிருந்தோம். ஆதார வைத்தியசாலை பருத்தித்துறையின் கிளை, தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையின் கிளை, யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவின் கிளை,மற்றும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் கிளை ஆகியவற்றின் கிளை சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

குறுகிய அறிவிப்புடன் ஊரடங்கு உத்தரவை நீக்குவதற்கான இந்த முடிவானது வடக்கு மாகாணத்தின் சுகாதார வைத்திய அதிகாரிகளின் வலுவான பரிந்துரைகளுக்கு எதிராக எடுக்கப்பட்டது என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம்.

16 தொற்றுநோயாளர்கள்,மதகுரு வுடன் இருந்து கொரோனா தொற்றுக்குள்ளாகியதும் அவருடன் நெருங்கிய தொடர்புகள் கொண்ட 329 பேர்களில் 80க்கு மேற்பட்டோர் இன்னமும் பரிசோதனைக்கு உட்படாமலும் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தில் வெளிநாட்டிலிருந்து வந்த 1200 க்கும் மேற்பட்டவர்கள் பரிசோதனைக்கு உட்படாமலும் இருப்பதால், வடக்கு மாகாண சுகாதார அதிகாரிகள் ஏப்ரல் 27 க்குப் பிறகு மட்டுமே ஊரடங்கு உத்தரவை நீக்க பரிந்துரைத்துள்ளனர்.

இக் காலகட்டத்தில் பரிசோதனைகளை ஆகக் குறைந்தது இந்த நெருங்கிய தொடர்புடையவர்களுடன் மேற்கொள்வதன் மூலம் யாழ்ப்பாணத்தின் சமூக தொற்று நிலை சம்பந்தமான வெளிப்பாடு தெரியவரும்.

குறுகிய அறிவிப்புடன் ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்ட பின்னர், பொது மக்கள் பல்வேறு நோய்களுடன் மருத்துவமனைகளுக்கு வருவார்கள்.மேலும் கோவிட் -19 க்கான குறைந்தபட்ச தடுப்பு நடவடிக்கைகளுடன் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய எல்லா மருத்துவமனைகளும் இன்னமும் தயார் நிலையில் இல்லை.

எனவே, நெருங்கிய தொடர்புகளின் பரிசோதனைகளை நிறைவு செய்வதற்கும், மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் உள்ள சுகாதார ஊழியர்களின் தனிப்பட்ட பாதுகாப்பிற்கான வசதிகளை மேம்படுத்துவதற்கும் ஊரடங்கு உத்தரவை குறைந்தது 7 நாட்களுக்கு நீட்டிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(ம-3.09)

### உங்களுடைய....

அதிகளவில் நோய் தொற்று கண்டறியப்பட்டதேயாகும்.

கொழும்பு பிரதேசங்களை பொறுத்த வரையில் நபர்கள் அதிக இடங்களுக்கு பயணிப்பதும், பல நபர்களுடன் தொடர்புகளை பேணுவதும் வழமையாக கொண்டிருக்கின்ற காரணத்தினால் இந்த நோய் எத்தனை பேரிடம் இன்னமும் பரவியுள்ளது என்பதில் எம்மால் சரியான நிலைப்பாடுகளை எடுக்க முடியாதுள்ளது. எனவே தொடர்ச்சியாக நாம் பரிசோதனைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த விடயத்தில் "கோவிட் -19" கொரோனா வைரஸ் தொற்றுநோய் முடிவுக்கு வந்துவிட்டது, கோவிட் -19 வைரஸ் தொற்றுநோயினால் பாதிக்கப்பட்ட இறுதி நபரை குணப்படுத்திவிட்டோம் என ஒரு சான்றிதழை எம்மால் இன்னமும் வழங்க முடியாத நிலையே உள்ளது.

எனவே இப்போது ஊரடங்குச் சட்டம் தளர்க்கப்படுகின்ற காரணத்தினால் மக்களே மிகக் கவனமாக தம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மக்கள் அனைவரும் பொறுப்புடன், சுகாதார ஆலோசனைகளை பின்பற்றி அடுத்தவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி செயற்பட வேண்டும். இதுவரை காலமாக மக்கள் கையாண்ட பாதுகாப்பு நடவடிக்கைகளையும் தாண்டி மிக அவதானமாக எதிர்வரும் காலங்களில் செயற்பட வேண்டும்.

இந்த விடயத்தில் எமக்கும் மிகப்பெரிய பொறுப்புகள் உள்ளது, இதுவரை காலமாக நாம் முன்னெடுத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை தாண்டிய கடுமையான வேலைத் திட்டங்களை எம்மால் முன்னெடுக்க வேண்டியுள்ளது. எனவே மக்கள் சுகாதார அதிகாரிகள் கூறுவதை முழுமையாக பின்பற்றி செயற்பட வேண்டும். அரசாங்கமும் முடிந்தளவு மக்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும், பாதுகாப்புகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

(ம-3)

### அரியாலையை...

தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு பேர் முழுமையாகக் குணமடைந்து நேற்று வீடு திரும்பினர்.

ஆண்கள் இருவரும் பெண்கள் இருவருமே இவ்வாறு முழுமையாகச் குணமடைந்த நிலையில் வெலிகந்தை வைத்தியசாலையிலிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அம்புலன்ஸில் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்டு அவர்களின் வீடுகளில் இறக்கிவிடப்பட்டனர்.

அரியாலை பூம்புகாரைச் சேர்ந்த ஒருவரும் முள்ளியைச் சேர்ந்த மூவருமே இவ்வாறு முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அவர்கள் வீடுகளுக்கு திரும்பினாலும் 14 நாள்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு வீட்டிலேயே இருப்பார்கள் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

(ம-3)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## 30 நாட்களுக்குள் 33,357 பேர் கைது

## 8,570 வாகனங்கள் பறிமுதல்

ஊரடங்குச் சட்டத்தை மீறியமை தொடர்பில் 30 நாட்களுக்குள் 33 ஆயிரத்து 357 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 8570 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய, ஊரடங்கு அனும திப்பத்திரம் இன்றி நடமாடியமை, சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் விநியோகம் , அத்தியாவசிய சேவை எனக்கூறி போலியாக செயற்பட்டமை , மாணிக்ககல் அகழ்வு , புதையல் அகழ்வு போன்ற சட்டவிரோத விடயங்கள் தொடர்பிலேயே அதிகளவானோர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. (ம-3)

### நேற்று மட்டும்....

நாளில் 17 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 17பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 271ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

நேற்று முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் 17 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியமை உறுதிப்படுத்தப்பட்டது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.அனைவரும் கொழும்பில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

91 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். மேலும் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

171 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## மதுபானசாலை...

களில் மதுபானசாலைகளை திறக்க அனுமதி வழங்கப்படுவதாக கலால வரித் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர், பிரதி கலால் வரி ஆணையாளர் கபில குமார சிங்க தெரிவித்தார்.

ஊரடங்கு தளர்த்தப்படும் காலப்பகுதிக்குள் மாத்திரமே சில்லறை விலையில் மதுபான விற்பனைக்கு அனுமதி வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

நிதி, பொருளாதார அமைச்சின் செயலாளரின் ஆலோசனைக்கு அமைய, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதி கலால் வரி ஆணையாளர் கபில குமாரசிங்க குறிப்பிட்டார்.

ஊரடங்கு ஒழுங்கு விதிகள், சமூக இடைவெளி உள்ளிட்ட கோவிட் - 19 தொற்றுக்கு எதிராக சுகாதார வழிமுறைகளை மதுபானசாலை விற்பனையாளர்கள் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

விதிமுறைகளை மீறி செயற்படுவோருக்கு எதிராக அதிகபட்ச நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் கலால் வரித் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர், பிரதி கலால் வரி ஆணையாளர் கபில குமாரசிங்க சுட்டிக் காட்டினார். (ம-3)

## பொதுமக்கள்...

பிடிப்பது அவசியமாகும் என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.

1. யாழ்ப்பாண மாவட்டத்தில் சமூக மட்டத்தில் கொரோனா தொற்று ஏற்பட்டவர்களை அடையாளங் காண்பதற்கான பரிசோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் சூழ்நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் அத்தியாவசியத் தேவைகளுக்காக வெளியே வருபவர்களைத் தவிர ஏனையவர்கள் இயலுமானவரை வெளியில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. மேலும் நாட்டில் கொரோனா அபாயம் முற்றாக நீங்கும் வரை ஏனைய மாவட்டங்களிலும் வெளியில் நடமாடுவதை இயன்றவரை குறைத்துக் கொள்ளுங்கள். மிகவும் அவசியமான தேவைகளற்று வெளியில் செல்வது, சிறுசிறு விடயங்களுக்காக பல தடவை வெளியில் செல்வது போன்றவற்றை தவிர்த்துக் கொள்ளுங்கள்.
2. சனநெருக்கமான இடங்கள், சன நெருக்கமான போக்குவரத்துச் சேவைகள் போன்றவற்றை இயன்றவரை தவிர்த்துக் கொள்ளுங்கள். தவிர்க்க முடியாத இடத்து அத்தியாவசிய தேவை கருதி வெளியில் செல்வதாயின் கட்டாயமாக ஒரு மீற்றர் சமூக இடைவெளியைப் பேணவும்
3. பொதுப் போக்குவரத்து சேவையிலீடுபடும் வாகனங்கள் அனைத்திலும் அனுமதிக்கப்பட்டுள்ள பயணிகளின் எண்ணிக்கையில் அரைவாசிப் பேர் மட்டுமே பயணம் செய்ய வேண்டும். அனைத்து வாகனங்களையும் தினமும் கிருமித் தொற்று நீக்கத்துக்கு உட்படுத்தவும்.
4. அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், ஏனைய பொதுமக்கள் அல்லது பணியாளர்கள் எனப் பலர் கூடக் கூடிய இடங்களில் பொருத்தமான, உரிய கைகழுவும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் அவற்றைக் கட்டாயமாக்கிக் கொள்ளவும்
5. மேலும் தனிநபர்களுக்கிடையிலான சமூக இடைவெளியை பேணுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
6. ஒன்றுகூடல்கள், கூட்டங்கள், சுற்றுலாக்கள், சமயநிகழ்வுகள், பொதுவழிபாடுகள், கோயில் திருவிழாக்கள், விளையாட்டு நிகழ்வுகள், வீட்டு வைபவங்கள் போன்றவை மறு அறிவித்தல் வரை தடைசெய்யப்பட்டுள்ளன என்பதை அறிந்து கொள்ளுங்கள்.
7. நீண்டநாட்களுக்குப் பின் ஊரடங்கு தளர்த்தப்படவுள்ளதால் பெருமளவானோர் முடிதிருத்தகங்களை (சலூன்) நாட வேண்டியிருக்கும். இங்கும் சமூக இடைவெளியைப் பேணவும்.
8. வெளியில் சென்று, வீட்டுக்குத் திரும்பும்போதெல்லாம் நன்றாக குளித்தல் நல்லது. ஆகக்குறைந்தது கைகளையாவது சரியான முறையில் ஓடும் நீரில் சவர்க்காரம் கொண்டு கழுவுங்கள். வீட்டில் உள்ள போதும் அடிக்கடி கைகளை உரியமுறையில் கழுவுங்கள். மேலும் கண், மூக்கு, வாய், முகம போன்றவற்றைத் தொடுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.
9. உங்களுக்கு கொரோனா தொற்றுக்குரிய அறிகுறிகளாகிய தொண்டை நோவு, வறட்டு இருமல், காய்ச்சல் போனற அறிகுறிகள் ஏதும் ஏற்பட்டால் முகக் கவசம் அணிந்து கொண்டு உடனடியாக அருகிலுள்ள அரச வைத்தியசாலையை அணுகுங்கள் என அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## பொதுத் தேர்த...

சூழல் சரியானதா என்பதை தீர்மானிக்கவும் கொரோனா வைரஸ் பரவுவது குறித்த தகவல்களை பெற்றுக் கொள்ளவும் இன்று திங்கட்கிழமை சுகாதார அதிகாரிகள், பாதுகாப்புப் படையினர் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளை சந்திக்க திட்டமிட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

குறித்த சந்திப்பில் தீர்மானம் எடுக்கும்வரை பாராளுமன்ற தேர்தலின் எதிர்காலம் குறித்து என்னால் கருத்து தெரிவிக்க முடியாது என்று மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டுவது போன்ற பிற விடயங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அல்லது தேர்தல் செயலகத்தின் கீழ் வரவில்லை. ஜனாதிபதி விரும்பினால் பாராளுமன்றத்தை மீண்டும் கூட்ட முடியும். அதுவே அவரின் தனிச்சிறப்பு. தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தல்களை நடத்துவது மட்டுமே என குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## பனையிலிருந்து...

சேர்ந்த அம்பலவாணர் சிவகுமார் (வயது-43) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இளவாலை பகுதியில் உள்ள பனை மரத்தில் கள்ளு சீவுவதற்காக கடந்த 17 ஆம் திகதி குறித்த குடும்பஸ்தர் மரம் ஏறியுள்ளார்.

பனை மரத்தின் வட்டுக்குள் இருந்து கள்ளு சீவிக் கொண்டு இருந்தபோது கால் சறுக்கி பனை மரத்திலிருந்து கீழே விழுந்துள்ளார்.

மயக்கமடைந்த நிலையில் உடனடியாக தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று மதியம் உயிரிழந்துள்ளார்.

இந்த இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)



SAFETY FACE MASK
3PLY WITH PROTECTION-
FILTER LAYER (Surgical Mask)
HYPOALLERGENIC
HIGH FILTRATION CAPACITY
STRETCHABLE EAR LOOPS
SUPER KING SANITIZER (500ml)
70% Gunuine Alcohol Level
Government Registed MRP Price: 980/- Discount Price : Rs. 750/-
உங்கள் வீடு, காரியாலயத்துக்கு கொண்டு வந்து தரப்படும்
5KM உட்பட்ட பிரதேசங்களுக்கு இலவச விநியோகம்
கூடிய தொகைக் கொள்வனவுகளுக்கு விசேட விலைக்கழிவு
யாழ் மாவட்டத்தில் எப் பிரதேசங்களுக்கும் விநியோகிக்கப்படும்
(Be Safe, Stay Safe, saynoto COVID 19) (C-9517)
NORTH LEAD DISTRIBUTORS #253, Stanley Road, Jaffna Town.
0774192275
0779184018

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 - 12 - 1972



மறைவு 17 - 04 - 2020

### திருமதி சாந்தினி நாகேந்திரன்

கொண்டலடி லேன், நல்லூரைப் பிறப்பிடமாகவும் இல.15, பலாலி வீதி, 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தினி நாகேந்திரன் அவர்கள் கடந்த 17.04.2020 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நாகேந்திரனின் அன்பு மனைவியும் கனித்தா, டிலக்சனா, பிரசங்கவி, திவ்வியன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.04.2020 வெள்ளிக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.15, பலாலி வீதி,
2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (2652)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை நாகலிங்கம்

(ஓய்வுபெற்ற புகையிரத சாரதி)

தோற்றம்: 07.04.1918 மறைவு: 17.04.2020

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகலிங்கம் (ஓய்வுபெற்ற புகையிரத சாரதி) கடந்த 17ஆம் திகதி தனது 102ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முருகேசு, நாகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் திருமதி சற்குண சறோஜினி (ஓய்வு பெற்ற ஆயுள்வேத வைத்தியர் - வலி வடக்கு பிரதேச சபை), காலஞ்சென்ற ரவி (சீமெந்து கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற அருமைநாயகத்தின் (ஆயுள்வேத வைத்தியர்) பாசமிகு மாமனாரும் Dr.அ.ஜெயகுமரன் (சுகாதார வைத்திய அதிகாரி - நல்லூர்), திருமதி நித்யா (தாதிய உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் சரண்யனின் (மாணவன் - யாழ்.இந்துக் கல்லூரி) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த 17.04.2020 வெள்ளிக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே:
0773715955, 0212240088 (C-9516)

தகவல்:
Dr.அ.ஜெயகுமரன் (பேரன்)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.04.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.